Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 | திருவள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 14 திங்கட்கிழமை (29.12.2014) பக்கங்கள் 20 | ஓசை – 090

# அரசிலிருந்து வெளியேறியது முஸ்லிம் காங்கிரஸ்



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிக்க உள்ளதாகவும், இதனால் அமைச்சுப் பதவிகளைத் துறந்து அரசிலிருந்து வெளியேறுவதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைமைய கமான தாருஸ்சலாமில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் மேற்கண்ட அறிவிப்பைத் தெரிவித்தார்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்தே முஸ்லிம் காங்கிரஸ் யாருக்கு ஆதரவு அளிப்பது என்று தடுமாறி, முடிவை அறிவிக்கும் நாட்களை பின் தள்ளி வந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோருடன் அவசர சந்திப்பை கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் நடத்தினர். இந்தச் சந்திப்பின்போது கிழக்கு கரையோர மாவட்டப் பிரேரணை தொடர்பில் ஆராயப்பட்ட போதும் முடிவு ஏதும் எட்டப்படவில்லை.

எனினும், கரையோர மாவட்டத்துக்கு புதிய அரச அதிபரை நியமிப்பதற்காக விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் நள்ளிரவில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் அவ்வாறான அறிவிப்புக்கள் எவையும் வெளியாகாத நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மு.கா. தனது முடிவை அறிவித்துள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள், 13 மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் 163 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியை விட்டு விலகி எதிர்க்கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளனர்.

எனினும். எதிர்வரும் கிழக்கு மாகாண சபை வரவு செலவுத் திட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது ஆதரவை அரசாங்கத்திற்கு வழங்கும்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## 8 தமிழக மீனவர்கள் நெடுந்தீவில் மீட்பு

படகு பழுதடைந்த நிலையில் இலங்கைக் கடற்பரப்பில் தத்தளித்த தமிழகம், மண்டபத்தைச் சேர்ந்த 8 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் மீட்கப்பட்டனர். இவர்களின் படகுகளையும் கடற்படையினர் கரைக்கு கொண்டுவந்தனர்.

கச்சதீவுக்கு அருகே நேற்றுக் காலை மீன்பிடித்துக் கொண்டிருந்த இவர்களின் படகுகள் பழுதடைந்து நெடுந்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## நாட்டைப் பிளவுபடுத்த முயலும் சக்திகளுடன் முஸ்லிம் காங்கிரஸ்

### அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டைப் பிளவுபடுத்தும் சக்திகளுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து கொண்டுள்ளதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

மேற்படி குற்றச்சாட்டை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலரும், அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த முன் வைத்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு எனத் தனியான ஒரு நிர்வாக அலகொன்றை வழங்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஜனாதிபதி நிராகரித்ததன் காரணமாகவே முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து விலகியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இன அடிப்படையிலான தனி நிர்வாக அலகொன்றை அரசு ஏற்றுக்கொள்ளாது. அது அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிரானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறையில் இவ்வாறான தனி நிர்வாக அலகொன்றை முஸ்லிம்களுக்காக ஏற்படுத்து



வது, பிரிவினைக்கு வழிவகுக்கும். இதன் காரணமாகவே

(19) ஆம் பக்கம் பார்க்க...

## பொது எதிரணியினர் வடக்கிற்கு விஜயம்

(கொழும்பு)


ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரப் பணிகள் நாடு முழுவதும் சூடு பிடித்திருக்கும் நிலையில், நாளைய தினம் வடக்கிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக உத்தியோகபூர்வ அறிவித்தலை பொது எதிரணி விடுத்துள்ளது.

தேர்தலுக்கான பிரசாரப் பணிகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி எதிர்வரும் 2 ஆம் திகதி வடமாகாணத்திற்கு வருகை தரவுள்ள நிலையில், பொது எதிரணியினர் எதிர்வரும் 30 ஆம் திகதி வடக்கிற்கு வருகை தரவுள்ளனர்.

இதன்படி 30 ஆம் திகதி பொது எதிரணியினரின் 3 ஆவது பிரசாரக் கூட்டம் மன்னார் மாவட்டத்தில் காலை நடைபெறவுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க...

## காங்கேசன்துறைக்கு யாழ்தேவி கன்னிப் பயணம்



யாழ்ப்பாணம் மத்திய புகையிரத நிலையத்திலிருந்து காங்கேசன் துறையை நோக்கி யாழ்தேவி நேற்றையதினம் பரீட்சார்த்த சேவையை ஆரம்பித்தது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது முயற்சியின் பயனாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினது பணிப்புரையின் அடிப்படையில் இந்தச் சேவை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## குளத்தில் விழுந்தவரை காப்பாற்ற குதித்தவர் மரணம்

வவுனியா, கல்மடு குளத்தின் வான் பகுதியில் இருந்து தவறி குளத்திற்குள் விழுந்தவரை காப்பாற்ற முயற்சித்த இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழந்தார். தவறிவிழுந்தவர் காப்பாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் கல்மடு மறவன் குளம் பகுதியைச் சேர்ந்த பெரியண்ணன் சுதாகரன் (வயது-23) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நேற்றுக் காலை வவுனியா கல்மடு குளத்தின் வான் பாயும் பகுதியைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த ஒருவர் குளத்திற்குள் தவறி விழுந்துள்ளார். விழுந்த நபரைக் காப்பாற்ற குளத்தைப் பார்வையிட வந்திருந்த இளைஞன் ஒருவர் குளத்திற்குள் குதித்த

(19) ஆம் பக்கம் பார்க்க...


## இளைப்பாறிய ஆசிரியர் கிணற்றில் சடலமாக மீட்பு

(கொடிகாமம்)

கொடிகாமம் கச்சாய் பகுதியில் இளைப்பாறிய ஆசிரியர் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். கொடிகாமம் -கச்சாய் வீதியைச் சேர்ந்த கந்தையா நவரத்தினம் (வயது-74) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

ஆலய தர்மகர்த்தா சபையின் தலைவரான இவர் நேற்றுக்காலை திருவெண்பாவை பூசைக்குச் சென்றிருந்த நிலையில் வீடு திரும்பாததை யடுத்து உறவினர்கள் தேடியபோது வீதியில் உள்ள கிணறு ஒன்றுக்குள் இறந்த நிலையில் காணப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டு, சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



## கிளிநொச்சி மாவட்டத்தில் வறட்சி காரணமாக

# அழிவடைந்த 50126.5 ஏக்கர் நெற்செய்கைக்கும் இழப்பீட்டு கொடுப்பனவுகள் வழங்க ஏற்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு காலபோகத்தில் ஏற்பட்ட கடும் வறட்சி காரணமாக சுமார் 50126.5 ஏக்கர் நெற்செய்கை அழிந்துள்ள நிலையில் நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமையன்று விதைநெல்லுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த 27 ஆம் திகதி வழங்கவிருந்த இக்கொடுப்பனவு விவசாயிகளின் பெயர்ப்பட்டியலில் ஏற்பட்ட குறைபாட்டை நிவர்த்தி செய்யும்வகையில் இடைநிறுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் புதன்கிழமை வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் ஆகியோர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக கமநலசேவைகள் அமைச்சினூடாக ஒதுக்கப்பட்ட சுமார் 50 மில்லியன் ரூபா நிதி மூலம் இவ் இழப்பீடுகள் வழங்கப்படவுள்ளன. இந்தக் கொடுப்பனவுகள் அந்தந்த கமநல சேவை நிலையங்களில் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் முதற்கட்டமாக ஒதுக்கப்பட்ட 50 மில்லியன் ரூபா நிதியினூடாக இவ் இழப்பீடுகள் வழங்கப்படுகின்றபோதும் பாதிப்பை எதிர்கொண்ட ஏனைய நெற்செய்கையாளர்களுக்கும் அடுத்த கட்டமாக இழப்பீடுகள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக பூநகரியில் 1814 நெற்செய்கையாளர்களுக்கும் இராமநாதபுரத்தில் 1226 செய்கையாளர்களுக்கும், முழங்காவிலில் 711 நெற்செய்கையாளர்களுக்கும், பளையில் 397 செய்கையாளர்களுக்கும், அக்கராயனில் 1304 பேருக்கும் உருத்திரபுரம் கமநல சேவை நிலைய பிரிவில் பல பேருக்கும் இழப்பீட்டுக் கொடுப்பனவுக்ளை பெறவுள்ளனர்.

இதேவேளை மானிய உரங்களை பெற்ற நெற்செய்கையாளர்கள் அனைவரும் பயிர் பாது காப்பு காப்புறுதி செய்திருந்த நிலையில் அவர்களுக்கும் பாதிப்பின் தன்மைக்கு ஏற்ப காப்புறுதியும் இழப்பீடும் எதிர்வரும் நாட்களில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சமுத்திரதேவா படகுச் சேவை இன்று முதல் மீண்டும் ஆரம்பம்

குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கான சமுத்திரதேவா படகுச் சேவை இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) இன்று காலை 10.30 மணிக்கு இந்த சேவையினை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து பழுதடைந்த நிலையிலிருந்த இந்தப் படகினை திருத்தும் நடவடிக்கைக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒன்பதரை இலட்சம் ரூபாவை ஒதுக்கியிருந்தார்.

திருத்தப் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் இன்று முதல் படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டு ஒன்றுவிட்டு ஒருநாள் நெடுந்தீவு - குறிகாட்டுவான் சேவை நடைபெறவுள்ளது.



வேலணை பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் வேலணை பிரதேச சபை தவிசாளருமான சின்னையா சிவராசா (போல்) ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக தேர்தல் பிரசாரத்தை நயினாதீவு பகுதியில் அண்மையில் மேற்கொண்டதைக் காணலாம். (த)

## காணித் தகராறு தந்தையை தாக்கிய மகன்

காணி சொத்து தகராறு காரணமாக தந்தையை மகன் தாக்கி படுகாயங்களுக்குட்படுத்திய சம்பவம் துன்னாலை மேற்கில் இடம்பெற்றுள்ளது.

காயங்களுக்குள்ளான தந்தை மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

மகனை கைதுசெய்த பொலிஸார் நேற்று பருத்தித்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது சந்தேகநபரை 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (18)

## மொத்த வியாபார நிலையத்தில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

நெல்லியடிப் பகுதியில் ஜமுனா ஸ்ரோர்ஸ் என்ற மொத்த வியாபார நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மழை பெய்துகொண்டிருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான பால்மா வகைகள் மற்றும் முக்கிய பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக கடை உரிமையாளரால் பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. (18)

## விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் மொழிக்கற்கைத் துறையினரால் நடத்தப்படும் உயர் தொழிற்றுறை தொடர்பாடலுக் கான உயர்தரச் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு புதிய மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான. விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் 18 வயதினை பூர்த்தி செய்தவர்களாகவும், கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறியை பூர்த்தி செய்தவர்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் ஆங்கில மொழி மற்றும் ஆங்கில இலக்கியத்திற்கான டிப்ளோமா பாடநெறிக்கு அவர்களது செயற்றிட்ட திறமையின் அடிப்படையில் உள்வாங்கப்படுவார்கள்.

விண்ணப்பப்படிவங்களை 16.01.2015 வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்திலும், 155 ஆம் கட்டை, கண்டி வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கிளிநொச்சி கற்கை நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## மகரஜோதி மண்டல பூசை

யாழ் கோண்டாவில் ஈழத்து சபரிமலை ஸ்ரீசபரீச ஐயப்ப சுவாமி தேவஸ்தான மகரஜோதி மண்டல பூசை இன்று இடம்பெறவுள்ளது. 20 ஆவது புனித தீர்த்த யாத்திரை குழுவின் பம்பாவாசன வெளியீடும் ஸ்ரீ குரு மண்டலம் அகஸ்தியர் ஆசிரமம் பிரபல பக்திப் பாடகர் வீரமணிதாசனின் அருளாசியுடன் நிகழ்வுகள் இடம் பெறும்.


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிளின் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல. 108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி அருகாமை)
021 222 8680,
077 592 5088.
(C/3930)


## குதிரை குட்டிகள் இறப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் மழை வெள்ளப் பெருக்கு காரணமாக குதிரைக் குட்டிகள் மற்றும் கால்நடைகள் என்பன இறந்த நிலையில் காணப்படுகின்றன.

தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் குளிருடனான மழை காரணமாக அப்பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த வெள்ளத்தில் சிக்கி குதிரைக் குட்டிகள் மற்றும் சிறிய கால்நடைகள் இறந்து போயுள்ளன.


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2593 திகதி 27-12-2014

ஆங்கில எழுத்து: W

வெற்றி எண்கள்: 01 07 56 66

போனஸ் இல: 65

ஜக்பொட் பரிசு ரூ.24,950,025/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 167396 | 20/- | 3,347,920/- |
| 2 இல | 11916 | 100/- | 1,191,600/- |
| 3 இல | 253 | 1,000/- | 253,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 6605 | 40/- | 264,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 483 | 1,000/- | 483,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 13 | 10,000/- | 130,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 24,950,025/- | - |
| 1 இல + போனஸ் இல | 8020 | 100/- | 802,000/- |
| 2 இல + போனஸ் இல | 368 | 500/- | 184,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 276 | 200/- | 55,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 12 | 1,500/- | 18,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 195347 | | 8,128,920/- |

ஜயதா நிற டிக்கட்டுகள் 2014.12.31 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 25,406,375/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3916)


## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | திங்கள் |
|---|---|
| AM 05.00 | ஆலய தரிசனம் (பக்தி பாடல்கள்) |
| AM 07.00 | காலை கதிர் |
| AM 08.00 | நாளிதழ் நேரம் |
| AM 09.00 | SMS Time (Live) |
| AM 09.58 | காலை செய்தி |
| AM 10.00 | HELLO DD |
| AM 10.30 | புதுயுகம் |
| AM 11.00 | சிரிக்க சிரிக்க |
| AM 11.30 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 12.30 | தமிழ் பேசு தமிழா |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | நகைச்சுவை திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்தி |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 07.30 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.20 | பாடல்கள் |
| PM 08.30 | HELLO DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# மூத்த பிரஜைகளின் பிரதிபலிப்புக்களை சமூகமட்டத்தில் வெளிப்படுத்த திட்டம்

## சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

சமூக சேவைகள் அமைச்சால் மூத்த பிரஜைகளின் பாரம்பரிய குண இயல்புகளை வெளிப்படுத்தும் தொலைக் காட்சி நாடகங்கள், மற்றும் படங் களை 2015 ஆம் ஆண்டில் சமூகத்தில் பிரபல்யப்படுத்துவதற்காக வரவு செலவுத் திட்டத்தினூடாக 100 மில் லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் திருமதி. இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அத்துடன் ஓய்வுபெற்றுள்ள மூத்த பிரஜைகள் அரசாங்க வங்கிகளில் வைப்பிலிடும் பணத்திற்கு 12 வீத வருடாந்த வட்டி வீதத்தை வழங்கு வதற்கும் வரவு செலவுத் திட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சமூகசேவைகள் அமைச்சின் கீழுள்ள முதியோர்களுக்கான தேசிய செயலகம் நாட்டிலுள்ள முதியோர் கள் தொடர்பாக சிறப்பான கவனத் தைச் செலுத்தி வருகிறது. இதற் காக பெரும்பாலான பிரதேச செயல கப் பிரிவுகள் தோறும் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியா ளர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் ஊடாக நலன்புரி சேவைகள் வழங் கப்பட்டு வருகின்றன என்றார். (90)


# மானிப்பாய் பிரதேச சபைக்கு விரைவில் கணேசவேல் உப தவிசாளராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்கு விரைவில் ஆ.சி.கணே சவேல் உப தவிசாளராக நியமனம் செய்யப்படவுள்ளார்.

தமிழரசு கட்சியின் உயர் பீடம் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது.

இதேவேளை முன்னாள் தவிசாளர் அ.ஜெபநேசன் இராஜினாமா செய்த பின்னர் உறுப்பினராக உள்ளார் எனவும் எவ்வித பதவிகளுக்கும் தான் விண் ணப்பம் செய்யவில்லை எனவும் உறுப்பினர்களுக்கு தெரிவித்துள்ளார். (92)



காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் வளர்க்கப்பட்டு வரும் பசுமாடுகளுக்கு கோமாதா பூஜை வழிபாடுகள் அண்மையில் நடைபெற்றபோது... (50)

# முல்லை - முத்தையன் கட்டு குளத்தின் வான் கதவுகள் இன்று திறக்க ஏற்பாடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமாகிய முத்தையன் கட்டுக் குளத்தின் வான்கதவுகள் இன்று திங்கட்கிழமை காலை 7 மணிக்கு திறந்துவிடப்படவுள்ளதாக முத்தையன்கட்டு நீர்ப்பாசன பொறி யியலாளர் நேற்று தெரிவித்தார்.

முத்தையன்கட்டு நீர்ப்பாசனக் குளத்தின் கீழுள்ள 6 குளங்களில் ஏற்கனவே வான் பாய்ந்து வரும் நிலையில், முத்தையன்கட்டு குளத் தின் நீர் மட்டம் தற்போது 20 அடி 6 அங்குலமாக அதிகரித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு நாட்களாக சராசரியாக 57 மில்லி மீற்றர் மழை பெய்து வருகின்றது. இந்நிலையில் குளத்தின் நீர்மட்டம் இன்று திங்கட்கிழமை காலைக்குள் 21 அடியாக அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதால் முத்தையன்கட்டு குளத் தின் 2 வான் கதவுகளையும் திறந்து விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முத்தையன்கட்டு குளத்தின் வான் கதவுகள் திறந்து விடப்படும் போது, வான் பாயும் பிரதேசங்களான வசந்தபுரம், மல்லாகண்டல், மற்றும் கன்னுத்திரபுரம் ஆகிய இடங்களை சேர்ந்த மக்களை பாதுகாப்பாக இருக் குமாறு அறிவுறுத்தப்பட்டு, அனர்த்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, முத்தையன்கட்டு நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழுள்ள தண்ணிமுறிப்பு குளத்திலும் நீர் மட்டம் 20 அடி 9 அங்குலமாக காணப்படுகின்றது.

இந்தக் குளத்தில் வான் கதவு களும் திறக்கவேண்டிய தேவையுள் ளதாக அவர் தெரிவித்தார்.

முத்தையன்கட்டு குளத்தின் கீழுள்ள தட்டமலை, விஸ்வமடு, கணுக்கேணி, உடையார்கட்டு, மருதமடு, மடவாள சிங்கம் ஆகிய குளங்கள் ஏற்கனவே வான் பாய்ந்து வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

# தூக்கிட்டு தற்கொலை

(சுன்னாகம்)

சுன்னாகம் மாரியப்புலம் பகுதி யில் இளம் பெண் ஒருவர் தூக்குப் போட்டு உயிரிழந்துள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த என்.தாட்சாயினி (வயது 36) என்ற இளம் பெண்ணே இவ்வாறு உயிரிழந் துள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது.

இவரது சடலம் நேற்றுப் பிற்பகல் சுன்னாகம் பொலிஸாரினால் யாழ். போதனாவைத்தியசாலையில் ஒப் படைக்கப்பட்டுள்ளது. (பா)

# மைத்திரியை ஆதரிப்பதற்கு தனிப்பட்ட நலன்களைவிட பொது நலன்கள் எதுவும் இல்லை

வடபுலத்தான் எழுதுவது...

மைத்திரிக்கு ஆதரவைச் சேர்க்கிறதுக்கு சில தமிழ் அரசியல்வாதிகள் படாத பாடெல்லாம் படுகிறார்கள் – ஆலாய்ப்பறக்கிறார்கள்.

ஆனால் இதை அவர்களால் வெளிப்படையாகச் செய்ய முடியவில்லை.

மாவை தலைமையிலான அணி தங்களுடைய ஆதரவாளர்களுக்கு ஊடாக மைத்திரி ஆதரவுப் பிரசாரத்தைச் செய்கிறது.

சுமந்திரன் எதிர்காலத்தில் தான் பெற விரும்புகிற நலன்களுக்காக மைத்திரியைத்தான் ஆதாரிக்க வேண்டும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மற்றக் கட்சிகளுக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் இரவு பகலாக வகுப்பெடுத்துக் கொண்டிருக்கிறார்.

சிவாஜிலிங்கம் எப்போதையும்போல தனி ஆளாகவே இந்தத் தடவையும் நிற்கிறார். சனங்களை அவர்கள் பாட்டில் விடுங்கள். அவர்களாகவே முடிவெடுப்பார்கள் என்று.

சுரேஸ் பிரேமச்சந்திரனும் சித்தார்த்தனும் செல்வம் அடைக்கலநாதனும் இந்தத் தடவை கொஞ்சம் புத்திசாலித்தனமாகச் சிந்திக்கிறார்கள் போலிருக்கிறது.

வெளிப்படையாக ஆதரவு எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்தால் அதனால் தங்களுக்கும் பாதிப்பு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் பாதிப்பு ஏற்படும் என்று. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் தமிழரசுக்கட்சி நடத்துகின்ற அடாவடிக்கு இந்தத் தடவை அதைத் தனிமைப்படுத்தித் தண்டிக்கவும் சனங்களுக்கு மத்தியில் தமிழரசுக்கட்சியை அம்பலப்படுத்தவும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தலாம் என்று சுரேஸ் சிந்திக்கிறார்.

ஆகவே, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வெளிப்படையான அறிவிப்புகள் இழுபடுவதற்கு சுரேஸ் தரப்பின் அழுத்தங்கள் காரணமாக உள்ளன.

சம்பந்தனைப் பொறுத்தவரை மைத்திரியின் வெற்றிக்கான சந்தர்ப்பத்தை விட மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கான வாய்ப்புகளே அதிகம் என்ற நம்பிக்கையோடு இருப்பதாகத் தெரிகிறது. இதைச் சம்பந்தன் தன்னுடைய நெருங்கிய சகாக்களிடம் தெரிவித்துமிருக்கிறார்.

சிங்கள மக்களிடம் மகிந்த ராஜபக்ஷவிற்கு இருக்கிற ஆதரவு இப்போதைக்கு மா–றாது. மைத்திரி சொன்னதைப் போலவோ, சந்திரிகா பேசியதைப் போலவோ, ரணில் நம்பிக்கை அளித்ததைப் போலவோ பெரிய அளவில் அவர்களால் வெற்றிக்கான சமிக்ஞையை உருவாக்க முடியவில்லை.

இப்படியிருக்கும்போது எப்படி நாங்கள் மைத்திரி வெல்வார் என்று நம்புவது? அதையும்விட மைத்திரியோ, ரணிலோ, சந்திரிகாவோ தமிழ் மக்களுடைய பிரச்சினையைப் பற்றியோ, தீர்வைப் பற்றியோ வாயே திறக்காமல் இருக்கிறார்கள். இந்த நிலைமையில் நாங்கள் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் போக முடியாது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார் சம்பந்தன்.

ஆனால், சம்பந்தனை நித்திரை கொள்ள விடாமல், சாப்பிட விடாமல் அரியண்டம் கொடுத்துக் கொண்டிருக்கிறார் சுமந்திரன்.

எப்பிடியும் மைத்திரிதான் வெல்வார். மைத்திரியைக் கொண்டு ஏராளம் விசயங்களை எல்லாம் செய்யலாம். ரணில் என்னோட வலு நெருக்கமாக இருக்கிறார் என்று சுமந்திரன் சம்பந்தனின் தலையைக் கழுவிக்கொண்டேயிருக்கிறார்.

இதற்குள் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் வெளிவந்து கொண்டிருக்கிற தன்னுடைய பத்திரிகைகளுக்கூடாக சரவணபவன் மைத்திரிக்கான சேவகத்தைத் தொடங்கி விட்டார்.

அமெரிக்க விசுவாசம், ஐக்கிய தேசியக் கட்சியின் வழிகாட்டல் ஆகியவற்றின் மூலமாக வாழ்ந்து கொண்டிருக்கிற சரவணபவனுக்கு இந்தத் தடவையும் நல்ல யோகம். தேர்தல் விளம்பரங்களுக்கும் பொது அணி வேட்பாளருக்கான பரப்புரைக்குமாக பெரிய தொகை கைமாறியிருக்கிறது போலும்!

அவரைப் பொறுத்தவரை பொது அணி வென்றால் என்ன தோற்றால் என்ன? காற்றுள்ள போது தூற்றிக் கொள்ள வேண்டியதுதான். இந்தக் கலையில் ஆள் பலே கில்லாடி.

இதற்குள் சிறிதரன் மற்றும் லங்கா சிறி குழுமத்தினரும் ஒருதொகையை வாங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

தமிழ்வின் மற்றும் ஜே.வி.பி நியூஸ், லங்கா சிறி என்ற இணையத்தளங்களின் வழியாக மைத்திரி புராணம் பாடுவதற்கான ஊழியம் இவர்களுடையது.

இதற்காகவே இவர்கள் கை நீட்டியிருக்கிறார்கள்.

இப்படியே பெரியதொரு உள்ளோட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

அரசாங்கத்தோட இணையாமல் இனிமேலும் மாகாணசபையை நடத்தவும் முடியாது. தமிழ் மக்களுக்கான அரசியலையும் நடத்த இயலாது என்ற முடிவுக்கு வந்து விட்டனர் தமிழரசுக்கட்சியினர்.

விக்கினேஸ்வரனும் இதைத்தான் சொல்லுகிறார். ஆனால், என்னதான் திறமை யாக மகிந்த அரசாங்கம் இருந்தாலும் அதனோடு இணைய முடியாது என இவர்கள் நினைக்கிறார்கள்.

இதற்குக் காரணம், இவ்வளவு காலமும் எதிர்த்துக் கொண்டிருந்து விட்டு இப்பொழுது வந்து திடீரென மகிந்தவுக்கு ஆதரவளியுங்கள் என்று எப்படி மக்களுக்குச் சொல்வது? என்று சொல்லியிருக்கிறார் மாவை சேனாதிராஜா.

மற்றும்படி மகிந்தவை நிராகரிப்பதற்கான எந்தக் காரணமும் இவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. மைத்திரியை ஆதரிப்பதற்கு தனிப்பட்ட நலன்களைவிட பொது நலன்கள் எதுவும் இல்லை.

கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள். - சுபாஷ் சந்திரபோஸ

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## மைத்திரியால் வருமா தீர்வு?

'தமிழ் மக்களின் வாக்குகளை முழுதாக மைத்திரிபால சிறிசேனவுக்கு எடுத்துத் தருவதாகக் கூறி வாங்கிய ஆறு கோடி ரூபாவை தமிழரசுக்கட்சி எம்.பிக்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதில் சிக்கல்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா அவர்கள் என்று செய்திகள் வருகின்றன.

நமக்குக் கவலையாக இருக்கிறது. இறைமையுள்ள தமிழரசு காணும் வரையான தொடர் அகிம்சைப் போரை ஆரம்பிக்க இன்னும் இரண்டு நாட்களே இருக்கும் வேளையில், தமிழ் மக்களுக்கு அந்த உறுதிமொழியை அளித்த தலைவர் வேறு காரியங்களில் நேரத்தைச் செலவிடுவதாக செய்திகள் வருவது நல்லதாகப் படவில்லை.

ஒருவேளை தமிழ்ப் பகுதிகளில் பிரச்சார வேலைகளுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மைத்திரிபால பணத்தைக் கொடுத்திருந்தாலும், அதை வாங்கி பகிர்ந்தளிப்பு வேலையை வேறு யாருக்காவது கொடுத்துவிட்டு, தமிழரசு காணும் வேலைகளில் அல்லவா கவனமெடுக்க வேண்டும் மாவை அவர்கள்.

மைத்திரிபால சிறிசேனவை வெல்ல வைக்கும் வேலைகளா இப்போது தமிழரசுக் கட்சிக்கு முக்கியம்? இறைமையுள்ள தமிழரசுக்கு அண்ணளவாகவேனும் செல்வதற்கு தான் ஏதேனும் செய்ய முடியும் என்று சிறு நம்பிக்கைக் கீற்றையாவது அளித்திருக்கிறாரா மைத்திரி?

பிறகு எதற்காக அவரை வெல்ல வைப்பதற்குப் பணப்பெட்டியைக் கைநீட்டி வாங்க வேண்டும் இந்தத் தன்மானத் தமிழ் முழக்கத் தலைவர்கள்?

மகிந்த ராஜபக்ஷ மீது தமிழ் மக்களுக்கு இருக்கும் கோபத்தைப் பயன்படுத்திக்கொண்டு, பதவிகளையும் பணப்பெட்டிகளையும் பெறுவதுதான் உங்கள் அரசியல் நோக்கம் என்றால், எதற்காக "அகிம்சைப் போர் நடந்தே தீரும்" முழக்கங்களால் மக்களை ஏமாற்ற வேண்டும்.

இவ்வாறான வீரப் பிரகடனங்களை மக்களுக்கு உறுதிபட வழங்கி, மூன்று மாதத்திற்குள்ளாகவே அதைச் சுலபமாக மறந்து கைகழுவி விட்டு, பிறகு இன்னொரு நேரம் இன்னொரு முழக்கத்தோடு வரும்போது வாய் கூசாதா?

சிங்கள அரசுக்கு எதிராக சிலபல சவால்களைச் சொல்லி, நாலு வார்த்தை ஆவேசமாகப் பேசினால், உங்களது பழைய ஏமாற்றையெல்லாம் மறந்துவிட்டு, புதிதாய் நடத்தப்போகும் அகிம்சைப் போருக்காகவும் மக்கள் மீண்டுமொரு முறை புல்லரிப்பார்கள் என்று நம்புகிறீர்கள்!

ஆனால் இது தொடர முடியுமா? இந்நாட்டில் பேருருவெடுத்திருக்கும் இனப்பகைமை என்ற பூதத்தினால் அதிகம் நஷ்டமடைந்து கொண்டிருப்பவர்கள் யார் என்று தமிழ் மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டால், பிறகு அதைவைத்து அவர்களை ஏய்க்க முடியுமா?

சம்பிக்க ரணவக்கவின் ஹெல உறுமய கட்சியுடன் செய்து கொண்டுள்ள கூட்டு ஒப்பந்தத்தில் "இந்த நாட்டில் சமஷ்டி முறையை ஒருபோதும் கொண்டு வர மாட்டேன்" என்று உறுதியளித்து ஒப்பமிட்டிருக்கிறார் மைத்திரிபால. அவரை வெல்ல வைப்பதற்காகவா ஏற்கனவே அறிவித்த அகிம்சைப் போரைக் கைவிடுகிறீர்கள்?

அறிவித்த போராட்டத்தைக் கைவிடுவது ஏன் என்று மக்களுக்கு உங்களது விளக்கத்தை அளிக்க வேண்டாமா? அல்லது இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதை விட மகிந்தாவைத் தோற்கடிக்கும் திருப்தி ஒன்றே எமது மக்களுக்குப் போதும் என்று முடிவு செய்துகொண்டு விட்டீர்களா?

ஒன்று நிச்சயமாகத் தெரிகிறது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதோ, அரசியல் அதிகாரங்களைப் பெற்று எமது மக்களின் வாழ்வை மேலுயர்த்துவதோ உங்களது நோக்கத்தில் ஒருபோதும் இல்லை என்பதே அது! - ஆசிரியர்

# பாப்பரசரின் மடு விஜயத்திற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

## ஐந்து இலட்சம் மக்கள் திரள்வார்கள்

பரிசுத்த பாப்பரசரின் மடுத் திருத்தல வருகையின்போது ஐந்து இலட்சம் மக்கள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக மடுத் திருத்தல பரிபாலகர் அருட்பணி எஸ். எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பாப்பரசரின் மடு வருகைக்காக சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்து வருகின்றன. எதிர்வரும் 14 ஆம் திகதி மடுவுக்கு வருகை தரும் பரிசுத்த பாப்பரசர் அன்றைய தினம் மாலை 3.15 மணிக்கு ஹெலிகொப்டர் மூலம் மடுத் திருத்தலத்தில் வந்து இறங்குவார். அவ்விடத்திலிருந்து பாப்பரசரை ஆலய மண்டப முன்றலுக்கு திறந்த வாகனம் மூலம் மன்னார் மறை மாவட்ட ஆயரும், கருதினாலும அழைத்து வருவர். இதன் போது அங்கு கூடியிருக்கும் மக்களை பாப்பரசர் ஆசீர்வதிப்பார். அத்துடன் பாப்பரசர் மக்களைச் சந்தித்து கலந்துரையாடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர் ஒரு மணித்தியாலம் மட்டுமே மடுவில் தங்கியிருப்பார்.

இறை வழிபாடும் பாப்பரசரின விசேட ஆசீர்வாதமும் இடம் பெற்றபின் மடு அன்னையின் திருச்சொரூப ஆசீர்வாதத்தையும் பாப்பரசர் வழங்குவார். பாப்பரசரின் வருகையை முன்னிட்டு சகல ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

எனினும், தற்பொழுது இப்பகுதியில் பெய்துவரும் கடும் மழை காரணமாக ஒரு சில ஆயத்த வேலைகள் காலதாமதம அடைந்து வருகின்றன. பாப்பரசரின் வருகையின்போது யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், அநுராதபுரம் ஆகிய ஐந்து மறை மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் கலந்து கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மக்கள் மடுத் திருப்பதிக்கு வருவதை இலகுபடுத்துவதற்காக நான்கு பாதைகளை பயன்படுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்படி, வவுனியாவிலிருந்து பிராமணக்குளம வழியாகவும் யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரியூடாகவும், மன்னார்-மடு வீதியூடாகவும், பெரியமடு வீதி வழியாகவும் மடுத் திருப்பதிக்கு வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரிசுத்த பாப்பரசரின் வருகை நிகழ்வில் கலந்து கொள்ள வரும் மக்களை அன்றைய் தினம் காலை பத்து மணி தொடக்கம் பிற்பகல் இரண்டு மணி வரையுமே சோதனைக்கு உட்படுத்தப்பட்டு உள்செல்ல அனுமதிக்கப்படுவர் அதன்பின் சோதனை நிறுத்தப்படுவதுடன் குறிப்பிடப்படும் சில இடங்களுக்குள் எவரும் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள் என மடு பரிபாலகர் மேலும் தெரிவித்தார். நிகழ்வு அன்று போட்டிக்கோ (ஆலயத்தின் முன்) பகுதிக்குள் வருபவர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவர்களுக்கு விசேட அடையாள சின்னம் அணிவிக்கப்படும அதன்பின் இவர்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் அமர்ந்து கொள்ளலாம். விசேடமாக அழைக்கப்பட்டவர்களுக்கு விசேட இடங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் குருக்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள் மாற்றாற்றல் உள்ளவர்களுக்கும் விசேட இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. தனியார், அரச போக்குவரத்து சேவைகளுக்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

# வடக்கில் வாக்களிப்பு தடுக்கப்பட்டால் நாடு முழுவதும் மீள்வாக்குப்பதிவு நடக்கும்

வடபகுதி மக்களில் எவரையேனும் அச்சுறுத்தி வாக்களிக்காமல் செய்யும் பட்சத்தில் தேர்தல் முழுமையாக இரத்துச் செய்யப்படும். இவ்வாறு எச்சரித்திருக்கிறார் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய. கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு,

இராணுவத்தினரின் அராஜக நடவடிக்கைகளால் வடபகுதி மக்கள் தேர்தலை பகிஷ்கரிக்கத் தயாராகின்றனர் என வடமாகாணத்தின் உதவி தேர்தல் ஆணையாளர்கள் எவரும் இதுவரை எனக்கு தெரியப்படுத்தவில்லை. இராணுவம் மக்கள் வாக்களிப்பை தடுக்கும் எனவும் நான் கருதவில்லை. எனினும் வடக்கின் நிலைமை தென்பகுதியை விட வித்தியாசமானது என்பது எங்களுக்குத் தெரியும். வெளிநாட்டவர்கள் தென் பகுதியில் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்.

ஆனால் வடக்கில் எனது உத்தியோகத்தர்கள் கூட படையினரிடம் அனுமதி பெறவேண்டும். நாட்டின் ஏனைய பகுதிகளை விட அதிகளவான இராணுவஆட்சி வடக்கில் காணப்படுகின்றது. வடக்கு மக்கள் வாக்களிக்க விரும்பினால், அந்தப் பகுதி அரசியல்வாதிகள் அவர்களை வாக்களிப்பதை தடுக்க விரும்பாவிட்டால், வேறு எவரும் மக்களை மிரட்ட முடியாது. வடபகுதியில் மக்களை யாராவது மிரட்டி அச்சுறுத்தி வாக்களிக்க விடாமல் செய்தனர் எனத் தெரியவந்தால் முழுத் தேர்தலையும் இரத்துச் செய்துவிடுவேன் என்றார்.

# அனர்த்தம் பாதித்தவர்களுக்கு உதவி இந்து இளைஞர் பேரவை கோரிக்கை

காலநிலை மாற்றம் காரணமாக பெய்துவரும் மழை காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும் தற்காலிக கொட்டகைகளிலும் வாழும் எமது உறவுகளுக்கு உதவிட வாரீர் என வவுனியா மாவட்ட சர்வதேச இந்து இளைஞர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது. தொடர்ந்து பெய்து வரும் மழையினால் குளங்கள், ஆறுகள் பெருக்கெடுத்து பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் பல மக்கள் இடம்பெயர்ந்து தற்காலிக கொட்டகைகளில் வாழ்ந்து வருகின்றனர்.

முதியவர்கள், குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் எனப் பலரும் பல இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். எனவே நல் உள்ளம் கொண்ட உறவுகள் துன்பப்படும் உறவுகளுக்கு உதவிட வாரீர் என வன்னி மாவட்ட சர்வதேச இந்து இளைஞர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# யாருக்காகவும் பிரசாரம் செய்யவில்லை ஆனந்தா பழைய மாணவர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் இடம்பெற்ற யுத்த வெற்றியை முதன்மைப்படுத்தி ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களில் தாம் ஈடுபடவில்லை என்று கொழும்பு ஆனந்தாக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளிக்கும் வகையிலான செய்தித்தாள் விளம்பரத்தை தாம் பிரசுரிக்கவில்லை என ஆனந்தா கல்லூரி பழைய மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினமும் நேற்றும் சிங்களப் பத்திரிகைகளில் ஆனந்தா கல்லூரி பழைய மாணவர் ஒன்றியத்தின் பெயரில் ஜனாதிபதிக்கு ஆதரவாக முழுப் பக்க விளம்பரங்கள் செய்யப்பட்டிருந்தன.

படைவீரர்களையும் ஜனாதிபதியையும் மின்சார நாற்காலியில் இருத்தி தண்டிக்க அனுமதிக்க முடியாது என விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், யுத்தத்தில் பங்கேற்ற முக்கிய அனைத்து படை அதிகாரிகளின் புகைப்படங்களும் பிரசுரிகக்கப்பட்டிருந்தன.

எனினும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளருக்கும் தமது அமைப்பு ஆதரவளிக்கவில்லை என ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவர் ஒன்றியத் தலைவர் லலித் சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

பழைய மாணவர் அமைப்பின் இரண்டு பிரிவுகள் உத்தியோகபூர்வமாக இயங்கி வருவதாகவும் இந்த இரண்டு பிரிவுகளும் ஜனாதிபதி மகிந்தவிற்காக பிரசாரம் எதனையும் செய்யவில்லை எனவும் அறிவித்துள்ளார்.

# மைத்திரி வந்தால் முதலில் அகற்றப்படப் போவது ஜனாதிபதி முறைமையல்ல மாகாணசபை முறைமையே

முதலில் இதோ வானத்திலிருந்து தேவதூதன் வருவது போல "இதோ மைத்திரி வருகின்றார்... மைத்திரி வருகின்றார்... அவரே எமக்கு விடுதலையின் ஒளியை கொண்டு வருகின்றார்" என்று கதையளந்தனர் கூட்டமைப்பினர். அவரும் வந்தாலும் வந்தார் மகிந்தவிடமிருந்த அத்தனை சிங்கள பௌத்த மேலாதிக்க தேசியவாதிகளையும் தன்னுடனே அழைத்துக்கொண்டுவந்தார்.

அப்போதே விழித்துக்கொண்டிருக்க வேண்டிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் மௌனம் காத்தனர். ஏனிந்த மௌனம் என்று கேள்வி எழுப்பவேண்டிய ஊடகங்களோ தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் மைத்திரியோடு கனவான் ஒப்பந்தம் செய்திருப்பதாக கூட்டமைப்பினரின் கள்ள மௌனத்துக்கு வக்காலத்து வாங்குகின்றனர்.

மைத்திரியின் மாராப்பு கூட்டணியில் அணிதிரண்டிருக்கும் சிங்கள தேசியவாதிகளையும் மீறி ஏதாவது நம்பிக்கைக் கீற்று வெளிப்படாதா என்ற நப்பாசையில் எதிரணி வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளிவரும்வரை காத்திருப்பதாக கூட்டமைப்பினரும் அறிக்கை விட்டனர். இப்போது மைத்திரியின் விஞ்ஞாபனமும் வெளிவந்து விட்டது. அதுவும் கூட்டமைப்பினரை அம்போ என்று கைவிட்டுவிட்டது.

மைத்திரியின் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை சொல்லாதது மட்டுமல்ல சிறுபான்மை மக்கள் இந்த நாட்டில் இருக்கின்றார்களா? என்று கேள்வி எழுப்பும் அளவிற்கு அவர்களை கண்டு கொள்ளாது விட்டிருக்கின்றது. ஒருவகையில் பார்த்தால் இலங்கையில் வாழும் சிறுபான்மை இனங்களின் இருப்பையே அது திட்டமிட்டு மறைத்திருக்கின்றது.

**சர்வதேசம் பார்த்துக்கொண்டிருக்கின்றது தமிழர்களே! சர்வதேசம் பார்த்துக் கொண்டிருக்கின்றது! என்று ஒவ்வொரு தேர்தலிலும் ஓயாது ஒலிக்கின்ற குரல்கள் எங்கே ஓடி ஒளிந்து விட்டன?**

## எழுகதிரோன் கட்டுரையிலிருந்து

மைத்திரியை தலையில் வைத்து கூத்தாடிய மனோ கணேசனே அவர் முகத்தில் காறி உமிழாத குறையாக வாயடைத்து நிற்கிறார். இந்த நிலையில், ஆட்சிமாற்றம் வேண்டும் என்று ஆரம்பத்தில் குரலெழுப்பிய கூட்டமைப்பினர் இப்போது அதற்கான காரணங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்ல முடியாது திக்குமுக்காடி நிற்கின்றனர்.

மக்களுக்கு சரியான பாதையை காட்ட முடியாது தமது கையாலாகாத் தனத்தை மூடிமறைக்க முயலுகின்றனர். ஜனாதிபதித் தேர்தல் குறித்து மக்களினதும் கட்சி அபிமானிகளின் கருத்துக்களை வடக்கு கிழக்கு எங்கும் அறிந்து வருவதாகவும் அக்கருத்துக்களின் அடிப்படையில் இறுதி முடிவு எடுக்கப்படுமென்றும் இப்போது புதிய கதைகளை அவிழ்த்து விடத்தொடங்கியுள்ளனர்.

எப்போதப்பா இந்த தமிழ் தலைமைகள் மக்களிடம் கருத்தறிந்து அரசியல் முடிவெடுத்தன? இதுவென்ன புதிய கதையென்று மக்கள் சிந்திக்க வேண்டாமா?

முதலாவது கிழக்கு மாகாண சபை தேர்தல் அறிவிக்கப்பட்டபோது இது வேண்டாமென்று மக்கள் சொன்னார்களா? அப்போது அதை எந்த மக்களின் கருத்தறிந்து கூட்டமைப்பினர் கிழக்கு மாகாண சபை தேர்தலை நிராகரித்தனர்?

வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும்போது கொழும்பிலிருந்து நீதிமான் விக்கினேஸ்வரனை அழைத்து



வாருங்கள் என்று எந்த மக்கள் கூட்டமைப்பினரிடம் விருப்பம் தெரிவித்தனர்? அப்போது யாருக்கு இந்த விக்னேஸ்வரன் என்னும் மனிதரை தெரியும்?

கடந்த கிழக்கு மாகாண தேர்தலில் தமிழ் முதலமைச்சரை அகற்ற செய்த சதித்திட்டம் எந்த மக்களின் கருத் தறிந்து தீட்டப்பட்டது? என்கின்ற கேள்விகளுக்கு நிச்சயம் தமிழ் தேசிய கூட்டமைப்பினரிடம் பதில்கள் கிடையாது. நமக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனப்பிழையாக இருக்கவேண்டும் என்று அரசியல் தலைமைகள் பொறுப்பற்று செயல்படமுடியாது. அரசியலில் எதிரியின் எதிரி நண்பன் என்பது போட்டி நடைபெறும் வரைதான் போட்டி முடிந்ததும் அந்த நண்பனே எதிரியாவான். இது கடந்த கால அரசியலில் நாம் கண்டுவந்த உண்மை.

ஒவ்வொரு தேர்தல்களிலும் ஒப்பந்தங்களிலும் இப்படி எதிரியின் எதிரியை நண்பனாக்கி கையை சுட்டுக்கொண்டவர்கள் நாம். கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை என்பார்கள். எதிரியின் எதிரி நண்பன் என்னும் கோட்பாட்டை முன்வைத்து மைத்திரி மீது ஒரு பிரமையை ஏற்படுத்தி தமிழ் மக்களை தவறாக அல்ல பிழையாக வழிநடத்தும் முயற்சியை கூட்டமைப்பினர் கைவிட வேண்டும்.

பண்டா-செல்வா ஒப்பந்தத்தை கைவிடக் கோரி யாத்திரை செய்து அதை நிர்மூலமாக்கிய யுஎன்பி மீது கொண்டிருக்கும் வர்க்க விசுவாசத்துக்காக கூட்டமைப்பினர் மக்களை தமிழ் பலிக்கடாக்களாக்க முடியாது.

இன்று "மாற்றம் வேண்டும்" ஆகவே "மைத்திரி வேண்டும்" என்று குரல் கொடுக்கும் சந்திரிகா ஒரு காலத்தில் முன் வைத்த தீர்வுப் பொதியை மைத்திரியை கொண்டு நிறைவேற்ற தயாரா? அந்த தீர்வுப்பொதியையே நாடாளுமன்றில் வைத்து தீயிட்டு கொளுத்திய ரணில் விக்கிரமசிங்கவை

**சந்திரிகாவை ஆலோசகராகவும் ரணிலை பிரதமராகவும் கொண்டு நொண்டிக்கு திரையாட்டம் களமிறங்கியிருக்கும் மைத்திரிக்கு மகிந்தவைப் போல் இந்த இனவாதிகளை வைக்க வேண்டிய இடத்தில் வைத்து தான் நினைத்ததை செய்யும் வல்லமை இல்லை.**





பிரதமராக்கி தமிழ் மக்களுக்கு எதை வாரி வழங்கி விடமுடியும்?

வாக்குறுதி தந்தவர்களே அதை நிறைவேற்ற முடியாமல் தடுத்து நிறுத்தும் சிங்கள தேசிய வாதிகளின் புகலிடமாக போயிருக்கும் மைத்திரியின் எதிரணி கதம்பம் எப்படி தமிழ் மக்களுக்கு நம்பிக்கையளிக்க முடியும்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதிலிறுக்க முடியாமல் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது விருப்பத்தை வெளிப்படையாக தெரிவிக்க முடியாமல் காலத்தை இழுத்தடிக்கின்றனர் என்பதே உண்மை.

அரசியலில் எது பிழை எது சரி என்பதல்ல. எல்லா வேளைகளிலும் எடுக்கின்ற முடிவுகள் சரியாக இருக்கப் போவதுமில்லை. எப்போதும் அரசியல் தலைமைகள் தீர்க்கதரிசனமாக செயற்படுவதும் சாத்தியமில்லைத்தான். ஆனால் மீண்டும் மீண்டும் பிழையான வழிகளினூடே மக்களை அழைத்துச்செல்வது ஒரு தலைமையின் சிறப்பல்ல. குறைந்த பட்சம் எடுக்கின்ற முடிவுகளுக்கு உண்மையாக செயற்பட வேண்டும். அதனை வெளிப்படையாக மக்களிடம் சொல்லுகின்ற தற்துணிவு வேண்டும்.

ஐந்தோ பத்தோ வருட வரலாறு மட்டுமே கொண்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியும் தாம் சரி என்று பயணிக்கும் பாதையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை ஆதரித்து பகிரங்கமாக பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். மக்களை வழிநடத்த அந்த நேர்மையும் நெஞ்சுரமும் அவசியமாகும்.

அந்த துணிச்சலின்றி 65 வருடகால அரசியல் அனுபவம் கொண்ட இந்த தமிழரசுக்கட்சியினர் - தனிநாட்டுக் கோரிக்கையின் பிதாமகர்கள் - ஒரு தேசிய தேர்தலில் நிலைப்பாடு எடுக்க முடியால் திண்டாடுவதென்பது கேவலமானது. ஒருபுறம் இன்னும் "முடிவு எடுக்கவில்லை" என்று சொல்லிக் கொண்டே "மாற்றம் வேண்டும்" என்று கோழைத்தனமாக மைத்திரிக்கு வாக்கு கேட்பது அதைவிட கேவலமானதாகும்.

நாடாளுமன்ற தேர்தலோ அன்றி மாகாணசபை தேர்தலோ இடம்பெறும் வேளைகளில் எடுத்துவிடுகின்ற ஐ.நா. அம்புகளும் சர்வதேச விசாரணை கோசங்களும் இங்கே ஏன் ஓடி ஒளிந்து விட்டன. சர்வதேசம் பார்த்துக்கொண்டிருக்கின்றது தமிழர்களே! சர்வதேசம் பார்த்துக்கொண்டிருக்கின்றது! என்று ஒவ்வொரு தேர்தலிலும் ஓயாது ஒலிக்கின்ற குரல்கள் எங்கே ஓடி ஒளிந்து விட்டன?

இப்போது மட்டுமென்ன சர்வதேசம் தூங்கி விட்டதா? இப்போதும் சர்வதேசம் பார்த்துக் கொண்டுதானே இருக்கின்றது? தடுமாறும் தமிழ் தலைமையையும் அதன் இராஜதந்திர லட்சணத்தையும்? அதிலும் விழிப்பாக வழமைக்கு மாறாக கண்ணுக்கு [illegible] விட்டுக்கொண்டல்லவா பார்த்துக் கொண்டிருக்கிறது?

ஒரு காலத்தில் இதோ புதிய விடியல் தனிநாடும் தன்னாட்சியதிகாரமும் கைக்கெட்டும் தூரத்தில் என்று பல புண்ணாக்குத்தனமான ஆய்வுகளை செய்து கொண்டிருந்த பலர் இன்று இந்த கூட்டமைப்பினரின் கள்ளமௌனத்துக்கு இராஜதந்திர வியாக்கியானம் கொடுக்கும் பணியில் ஈடுபட்டுவருகின்றார்கள். எதற்காக மைத்திரியை ஆதரிக்கவேண்டும் என்று மக்களிடம் நியாயம் சொல்ல வக்கின்றி நிற்கும் கூட்டமைப்பினருக்கு ஆலவட்டம் வீசும் செயலில் இவர்கள் இறங்கியிருக்கின்றார்கள்.

தமிழ் மக்களுக்கு கொஞ்ச நஞ்சமாவது அதிகாரப் பரவலாக்கத்தை வழங்கியிருக்கும் இந்த மாகாண சபை முறைமையை எப்படியாவது இல்லாதொழிக்க வேண்டும் என்று மகிந்தவிடம் மன்றாடு போட்டு முடியாத பட்சத்தில் மைத்திரியிடம் போய்ச் சேர்ந்திருக்கின்றது சிஹல உறுமய. சந்திரிகாவை ஆலோசகராகவும் ரணிலை பிரதமராகவும் கொண்டு நொண்டிக்குதிரையாட்டம் களமிறங்கியிருக்கும் மைத்திரிக்கு மகிந்தவைப் போல் இந்த இனவாதிகளை வைக்க வேண்டிய இடத்தில் வைத்துத் தான் நினைத்ததை செய்யும் வல்லமை இல்லை.

கிழக்கு மாகாண சபையை உருவாக்கும் போதும் வடமாகாண சபையை உருவாக்கும் போதும் சிஹல உறுமய, ஜே.வி.பி. போன்றன படாத பாடு பட்டன. ஆனால் மகிந்தவோ வரலாற்றில் இருந்த எல்லா தலைவர்களையும் போலன்றி அந்த எதிர்ப்புகளுக்கு அஞ்சாது சிங்கள தேசிய வாதிகளை மீறி குறைந்த பட்ச அதிகார பரவலாக்கத்தை அமுல்படுத்தி காட்டியவர்.

எனவே ஏதாவது அதிசயங்கள் நிகழ்ந்து மைத்திரி வந்தால் முதலில் அகற்றப்படப்போவது ஜனாதிபதி முறைமையல்ல மாகாண சபை முறைமையே ஆகும் என்பதை தமிழ், முஸ்லிம் சிறுபான்மையினர் மனதில்கொள்ள வேண்டும். அப்படி நடக்கப்போகும் அசம்பாவிதங்களுக்கு எதிர்காலத்தில் இந்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரே பொறுப்பானவர்களாகும்.

# தொடரும் சீரற்ற காலநிலை ஜனாதிபதித்தேர்தலை பாதிக்குமா?

## பிரதேச செயலர்களுடன் ஆராய்வு



(கொழும்பு)

கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக பெருமளவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஜனவரி எட்டாம் திகதி ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது சாத்தியமான விடயமா என்பது குறித்து தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய ஆராய்ந்து வருவதாக உதவி தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம முகமட் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளர் இது குறித்து மீண்டும் ஒரு முறை பிரதேச செயலாளர்களுடன் ஆராய்ந்து பின்னரே இறுதி முடிவை எடுப்பார் என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

தேர்தல்கள் ஆணையாளர் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடி விஜய மொன்றை மேற்கொண்டு நிலைமையை மதிப்பிடுவார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது மழைவெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து ஆராயப்பட்டுள்ளதாகவும்,ஐக்கிய தேசியக் கட்சி பிரதிநிதிகள் தேர்தலைபிற்போடவேண்டும் என கோரிய அதேவேளை அரச தரப்பினர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

# நடுவீதியில் பிளவு மலையகத்தில் அனர்த்தம்



பதுளை - நுவரெலியா பிரதான வீதியின், வெலிமடை -ரிப்பொல பகுதியில் தாழ் இறங்கியுள்ளது.

இதனால் அவ்வீதியினூடாக பயணம் செய்யும் வாகனசாரதிகள் மாற்று வழியை பயன்படுத்துமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை, ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியிலும் ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியிலும் மண்சரிவு ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும், வீதி வழுக்கும் தன்மையாக இருப்பதனாலும் வாகன சாரதிகளை மிகுந்த அவதானத்துடன் செல்லுமாறும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியில் நானுஓயா பங்களா அத்த பகுதியில் ஏற்பட்டிருந்த மண்சரிவு தற்போது அகற்றப்பட்டுள்ளதாவும், எனினும் தொடர்ந்து மண்சரிவு ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும், நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியில் இடைக்கிடையே மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் வாகனசாரதிகள் அவதானமாக செயற்படுமாறு மாவட்ட செயலாளா் டீ.பீஜ குமாரசிறி தெரிவிக்கின்றார்.

# சுதந்திரக் கட்சிக்கு சமாந்தரமாக மாற்றுக்கட்சி விரைவில்

## நடக்கிறது ஏற்பாடு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாற்றுத்தலைமை ஒன்று உருவாக்கவுள்ளதாக தெற்கில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாற்று சுதந்திரக் கட்சியொன்றை உருவாக்கும் முயற்சிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் கட்சியிலிருந்து விலகி எதிர்க்கட்சியில் இணைந்து கொண்டுள்ள சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் இவ்வாறு மாற்று சுதந்திரக் கட்சியொன்றை உருவாக்கத் திட்டமிட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மைத்திரிபால சிறிசேன மற்றும் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் இந்த மாற்று சுதந்திரக் கட்சி உருவாக்கப்பட உள்ளது.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் தலைமையிலான சுதந்திரக் கட்சிக்கு சவால் விடுக்கும் வகையில் இந்தக் கட்சி உருவாக்கப்பட உள்ளது.

தற்போதைய சுதந்திரக் கட்சியின் யாப்பு விதிகளிலும் மாற்றம் செய்யப்பட உள்ளதாக முன்னாள் பிரதி அமைச்சர் எம்.கே.டி.எஸ். குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கட்சி தாவிய ஆளும் கட்சி உறுப்பி னரகளின் கட்சி உறுப்புரிமையை நீக்குவதற்கு ஆளும் கட்சி முயற்சித்து வருவதாகவும், அவர்களின் உறுப்புரிமையை உறுதி செய்ய உதவிகளை வழங்கத் தயார் எனவும் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# முற்போக்கு முஸ்லிம் காங்கிரஸ் மைத்திரிக்கு ஆதரவு



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில்,எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு பூரணஆதரவு வழங்குவதாக, முற்போக்கு முஸ்லிம் காங்கிரஸின் மத்தியகுழுவில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றியதீர்மானத்தின் பிரதிகள்,பொதுவேட்பாளரின் தலைமைக் காரியாலயத்திற்கும், பொதுவேட்பாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக செயலாளர் சட்டத்தரணிடாக்டர் கே. சமீம் தெரிவித்தார்.

இது தொடர்பில்,எதிரணி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை அவரது இல்லத்தில் சந்தித்த, சிறிலங்கா சுதந்திரக் கட்சிபொத் துவில் தொகுதியின் முன்னாள் பிரதான அமைப்பாளரான சட்டத்தரணி எம். இஸ்மாயில் ஆதம் லெப்பை தலைமையிலான குழுவினர், தமது ஆதரவை நேரடியாகத் தெரிவித்ததாகவும் செயலாளர் தெரிவித்தார்.

பொதுவேட்பாளரைச் சந்தித்தகாங்கிரஸின் முதல்வர் தலைமையிலானகுழுவில், தன்னோடு, உப செயலாளர் எ.எம்.ஜெ.்.பர், பொருளாளர் ஓய்வுபெற்ற விவசாயவிரிவாக்க உத்தியோகத்தர் எஸ். ஆதம் பாவா ஆகியோரும் இடம் பெற்றிருந்ததாகவும் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# மசகு எண்ணை விலையில் சரிவு

2009 ஜூலை மாதத்தின் பின்னர் முதல் தடவையாக மசகு எண்ணெய் பீப்பா ஒன்றின் விலை 60 அமெரிக்க டொலர்களை விட சரிவடைந்திருந்தது.

சீன தொழிற்சாலைகளின் செயற் பாடுகள் மந்த கதியில் இடம் பெறுகின்றமை மற்றும் சர்வதேச நாணய பெறுமதிகளின் மதிப்பு குறைந்தமை போன்றன மசகு எண்ணெய்க்கான சர்வதேச கேள்வியை குறைத்திருந்தன.

மேலும் ஜூன் மாதம் முதல் சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை வீழ்ச்சியடைந்திருந்த நிலையில், உற்பத்தி நாடுகளின் அமைப் பான ஒபெக், விலையை அதிகரப்பதற்காக உற்பத்தியை குறைப் பதற்கு நடவடிக்கையை மேற் கொள்ளவில்லை.

கடந்த ஏழு மாதங்களில் முதல் தடவையாக உலகின் இரண்டாவது மிகப்பெரிய வர்த்தக நாடாக திகழும் சீனாவின், தொழிற்சாலை செயற்பாடுகள் வீழ்ச்சியடைந்திருந்ததை தொடர்ந்து, சர்வதேச எரிபொருள் விற்பனை விலையிலும் அது தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

# அரசியல் சாசனத்தில் கைவைக்க மைத்திரி துணிய மாட்டார்

## மாதுலுவே சோபிததேரர் சொல்கிறார்

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன புதிய அரசியல் சாசனமொன்றை உருவாக்க மாட்டார் என்று நீதிக்கான சமூகத்தின் அழைப்பாளர் மாதுலுவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

த்றபோதைய அரசியல் சாசனத்தை திருத்தி அமைப்பார் என அவர் குறிப்பிட் டுள்ளார்.

புதிய அரசியல் சாசனமொன்றை அமைப்பதற்கு குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் தேவைப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

முதல் நூறு நாட்களில் தற்போதைய அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் செய்யப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



ஜனாதிபதியின் அனைத்து அதிகாரங்களும் இரத்து செய்யப்பட வேண்டிய அவசியமில்லை எனவும், தேசிய பாதுகாப்பு தொடர்பிலான விடயங்களை ஜனாதிபதி தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டுமென வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய அரசாங்மொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம்களின் ஒத்துழைப்புடன் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டுமென மேலும் வலியுறுத்தியுள்ளார்.

# தொடர்கிறது சீரற்ற காலநிலை உயிரிழப்பும் அதிகரிப்பு



நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக 21 பேர் உயிரிழந்துள்ளதோடு, 15 பேர் காணாமற் போயுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இதனால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பத்து இலட்சத்தை தாண்டுவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஊடகப் பேச்சாளர் சரத் லால்குமார குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டுக்கு அருகில் நிலைகொண்டுள்ள தாழமுக்க நிலை காரணமாக மழை மற்றும் காற்றுடன் கூடிய காலநிலை தொடர்ந்தும் நீடிகக லாம் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

# வவுனியாவில் கிறிஸ்மஸ்நிகழ்வு ஷிராந்தி ராஜபக்ஷ பங்கேற்பு

(வவுனியா)

வவுனியாவிற்கு திடீர் விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிராந்தி அங்குள்ள கிருபை சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற கிறிஸ்மஸ் நிகழ்வில் கலந்து கொண்டார்.

இக் கலை நிகழ்வுகளில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ச பரிசில்களை வழங்கினார்.

இவருக்கு நினைவுப் பரிசில் ஒன்றும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக ஜனாதிபதி இணைப்பாளர் கிசோர், வடமாகாணசபை உறுப்பினர் தர்மபால ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பெற்றோரை இழந்த கிருபை சிறுவர் இல்லத்து மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (70)

## மக்களின் தெரிவில் புனரமைப்பு

வீதி புனரமைப்பு பணிகள் எதிர்காலத்தில் மக்களால் தெரியப்பட்ட முன்னுரிமை அடிப்படையிலேயே உட்கட்டுமான வேலைகள் முன்னெடுக்கப்படும் என வலி.தென்மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவரும் மானிப்பாய் தொகுதி ஈ.பி.டி.பி.அமைப்பாளருமான வெ.அ.ஜோன்சன் (ஜீவா) தெரிவித்தார்.

வலி.தென்மேற்கின் பன்முக அபிவிருத்தி தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மானிப்பாய் பிரதேச சபை 28 கிராம அலுவலர் தொகுதிகளைக் கொண்டது. இங்கு ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் 100 முதல் 150 வரையிலான வறிய குடும்பங்கள் உள்ளன.

இக் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளை இயன்றவரை வழங்கியுள்ளோம். எதிர்காலத்தில் மேலும் இனம் காணபடும் குடும்பங்களுக்கு உதவ திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.

மேலும் உள்ளூராட்சியின் பதவிக் காலம் முடிவடைய இன்னும் சிறுது காலமே உள்ளது. அக்காலங்களில் பிரதேச சபை உறுப்பினர்கள், அரச அலுவலர்கள் ஒருங்கிணைந்த ரீதியில் நல்லாட்சியை முன்னெடுப்பதன் ஊடாக அபிவிருத்திகளை முன்னெடுக்கலாம் என்றார். (92)

# அழிவைநோக்கிய அரசியலை இளைஞர்கள் நிராகரிக்க வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு


(கிளிநொச்சி)

குறுகிய அரசியல் இலாபங்களுக்காக இளம் சமூகத்தின் உணர்வுகளை தூண்டி அவர்களை அழிவுகளை நோக்கி இழுத்துச் செல்லும் அரசியல் வழிமுறைகளை எமது இளம் சமூகத்தினர் அடியோடு நிராகரிக்க வேண்டும் என ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் தனது நிதி ஒதுக்கீட்டின் மூலம் கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசம் முல்லையடி கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கான 40 அடி தகர பந்தல் மற்றும் கதிரைகள், ஒலி பெருக்கி தொகுதி என்பவற்றை வழங்கி வைத்ததோடு, முல்லையடி விநாயகர் விளையாட்டு கழகத்தின் புனரமைக்கப்பட்ட மைதானத்தையும் கழகத்தின் பயன்பாட்டுக்கு கையளித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த கால யுத்தம் பெருமளவுக்கு எமது இனத்தின் இளம் சமூகத்திற்கே பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அவர்களது வாழ்க்கையின் மிக முக்கிய பருவம் இருண்ட காலமாக அமைந்து விட்டது. இதனால் கல்வி முதல் முன்னேற்றத்திற்கான வழிகளை எல்லாம் தொலைத்து இன்றும் பல்வேறு நெருக்கடிக்குள் வாழவேண்டிய சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். ஆனால தற்போது அந்த நிலைமை மாற்றப்பட்டுள்ளது. இளம் சமூகம் தங்கள் வாழ்க்கையில் முன்னோக்கி செல்வதற்கான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது இந்தச் சூழலை எமது இளம் சமூகத்தினர் நல்ல முறையில் பயன்படுத்தி வருகின்றனர்.



இளைஞர், யுவதிகள் எப்பொழுதும் தங்களின் ஒளிமயமான எதிர்காலம் தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டும் தெளிவான சிந்தனையுடன் சரியான பாதையில் செல்கின்ற வழிமுறைகளை பின்பற்றி சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மாறாக உசுப்பேத்துகின்றவர்களின் கருத்துக்களுக்கு எடுபட்டு மீண்டும் தங்களின் வாழ்க்கையினை இருண்ட யுகத்திற்குள் தள்ளாது இருக்கும் வகையில் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் பளை பிரதேச சபையின் உறுப்பினர்கள் அன்ரன் அன்பழகன், இராசதுரை, சமூக சேவையாளர் தர்மலிங்கம், முல்லையடி கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் சிவராசா, செயலாளர் ஜெயந்தன், விளையாட்டுக்கழக செயலாளர் கஜகுகன், மாதர்கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி புஸ்பமேரி, மற்றும் விளையாட்டுக் கழக உறுப்பினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மனிதனுக்கு வாசிப்பின் முக்கியத்துவம் விழிப்புணர்வு தெருவெளி ஆற்றுகை



(மானிப்பாய்)

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் என்னும் தெருவெளி ஆற்றுகை 2014 தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு புத்தாக்க அரங்க இயக்க (ஐ.ரி.எம்) கலைஞர்களினால் ஆற்றுகை செய்யப்பட்டுள்ளது.

இத் தெரு வெளி ஆற்றுகையானது 2012 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக 3 ஆவது வருடமாக 300 இற்கு மேற்பட்ட ஆற்றுகைகளாக நிகழ்ததப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சியாக 3 ஆவது வருடமாக இவ் ஆற்றுகையானது 300 ஆற்றுகைகளை கண்டு பலரது பாராட்டுக்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், சனசமூக நிலையம், பிரதேச சந்தை பொது மக்கள் கூடும் இடங்களில் தொடர்ச்சியாக இத் தெருவெளி நாடகமானது ஆற்றுகை செய்யப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களிலும் வாசிப்பின் அவசியத்தினை மாணவர்களிடையே ஊட்டவேண்டிய தேவைப்பாடு உள்ளதன் காரணமாக தொடர்ச்சியாக இந் நாடகமானது ஆற்றுகை செய்யப்படவுள்ளதாக புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அறிவித்துள்ளனர்கள்.

இத் தெருவெளி ஆற்றுகைககான நெறியாள்கையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளரும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியருமாகிய எஸ்.ரி.குமரன் புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப்பணிப்பாளரும் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியருமாகிய எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோர் மேற்கொண்டுள்ளார்கள். (63)

## மத ஒன்று கூடலும் முதியோர் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மத ஒன்றுகூடலும் முதியோர் கௌரவிப்பும் இன்று திங்கட்கிழமை யாழ்.ஒஸ்மானியாக்கல்லூரி மஹ்மூத் மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு முதியோர் சங்கத்தலைவர் சி.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

சர்வமதத் தலைவர்களான சிவஸ்ரீபாலசுப்பிரமணியக் குருக்கள், வண.பிதா கி.யோ.ஜெயக்குமார், மௌலவி ஏ.எம்.ஏ.அஸீஸ் ஆகியோர் பங்கு பற்றுவார்கள்.

பிரதம அதிதியாக யாழ்.பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் சிறப்பு அதிதியாக அருட்தந்தை அ.ஜாவிஸ், எஸ்.யுகேந்திரன் (சர்வோதயம்), திருமதி.எஸ்.இதயராஜ் (இதம்), வி.சுந்தரமூர்த்தி (தியாகி அறக்கொடை), செ.ஸ்ரீஸ்கந்தராசா, வ.சுரேஸ்குமார், த.அருந்தமிழ் செல்வன் (ஜே/86), எம்.மகேந்திரராசா (அதிபர் ஒஸ்மானியாக்கல்லூரி) ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

இந்நிகழ்வில் சர்வமத குருமாரின் ஆசியுரை, மாணவர்களின் கலைநிகழ்ச்சி, முதியோர் கௌரவிப்புடன் பரிசளிப்பும் இடம் பெறவுள்ளன. (105)

## முரசின் இன்றைய பலன்

(29.12.2014 திங்கட்கிழமை)

ஜய வருஷம் கார்த்திகை மாதம் 14 ஆம் திகதி.

அட்டமி பிற்பகல் 03.19. உத்தரட்டாதி 07.58 - 09.28.

யமகண்டம் 10.58 - 12.28.

இராகு காலம 07.58 - 09.28 வரை. சுபநேரம 12.28 - 01.58 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
விழாக்களில் தம்பதியர் சகிதம் கலந்து சிறப்பித்தல், வெளியூர் மணமகனை தேடல்.

**ரிஷபம்**
முரண்பாடு ஏற்படாது விடல், குறுக்கே நின்றவர்கள் விலகி விடல்.

**மிதுனம்**
பரிசில், கௌரவம் கிடைத்தல், தற்காலிக பணி நிரந்தரமாக்கும் செய்தியறிந்து மகிழ்வுறல்,

**கடகம்**
ஒத்துழைப்பு பாதகமாக இருத்தல், விவாகம் நிறைவேறத் தடை.

**சிம்மம்**
புதிய நபர்களால் ஆபத்து. மனக்கவலை ஏற்படல்.

**மீனம்**
திடீர் பயணம் ஏற்படலாம், உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளல்.

**கன்னி**
எதிர்பாராத விபத்து ஏற்படல். வெளியூர் பயண முயற்சிக்கு ஆயத்தமாதல்.

**கும்பம்**
குடும்பத்தில் கவின் நிலை ஏற்படல், அவதானம் அவசியம்.

**மகரம்**
உறவினர்கள் வருகை, வாக்குவாதம் ஏற்படும்.

**தனுசு**
வெளியூர் செல்வதைக் கைவிடல், கடமையைப் பிரச்சினையின்றி செய்தல்.

**விருச்சிகம்**
தொழிலுக்காக புதிய நடைமுறையைப் பின்பற்றல், பெற்றோரின் தேகநிலையில் முன்னேற்றம் ஏற்படல்.

**துலாம்**
மருத்துவபரிசோதனை சாதகமாதல், பிள்ளைகளின் செயற்பாட்டால் மனவேதனை ஏற்படல்.





இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண பாடசாலைகளின் 13,15,17,19 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் வீரர்களுக்கான இரு நாள் பயிற்சி முகாம் நேற்று யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமானது. இதில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் மற்றும் தேசிய ரக்பி வீரர் ரோகித ராஜபக்ஷ, இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் நிசாந் ரணதுங்கா உட்பட பலர் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். இதன்போது முரளிதரன் உள்ளிட்ட இலங்கை கிரிக்கெட் சபையின் உயர் மட்ட பயிற்றுவிப்பாளர்கள் பயிற்சிகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளின் வீரர்கள், பயிற்றுநர்கள் பங்குகொண்டனர். இதன்போது கிரிக்கெட் உபகரணங்களும் வழங்கப்பட்டன. இப்பயிற்சி முகாமை இலங்கை கிரிக்கெட் சபையின் கனிஷ்ட தேர்வுக் குழு உறுப்பினர்களில் ஒருவரான நிசாந்தன், யாழ். மாவட்ட பயிற்றுவிப்பாளர் லக்சித ஆகியோர் ஒழுங்குபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, இப்பயிற்சி முகாம் இன்று மாலை வரை நடைபெறவுள்ளதாகவும், இதில் திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்தும் வீரர்கள் இரண்டாம் கட்ட பயிற்சி முகாமிற்கு தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (பா)




# கருணாரட்ன கன்னிச் சதம்

## தாமதமாகின்றது நியூசிலாந்தின் வெற்றி

(கிறிஸ்சேர்ச்)

கருணாரட்னவின் கன்னிச் சதத்தின் மூலம் இனிங்ஸ் தோல்வியிலிருந்து இலங்கை அணி மீளும் நிலையைப் பெற்றுள்ளது. நியூசிலாந்து, இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் நியூசிலாந்தின் கிறிஸ்சேர்ச்சில் நடைபெற்று வருகின்றது. இதில் இரண்டாவது இனிங்ஸிற்காக விக்கெட் இழப்பின்றி 84 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை இலங்கை அணி தொடர்ந்தது. இதில் ஜே.கே. சில்வா, குமார் சங்கக்கார ஆகியோர் வந்தவேகத்திலேயே ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த திரிமன்னே சிறிது நேரம் தாக்குப் பிடித்தபோதிலும் களத்தில் தரித்து நிற்க முடியவில்லை. இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த கப்டன் மத்தியூஸ் பொறுப்புடன் ஆட மறுமுனையில் நிதானம் இழக்காமல் போராடிய கருணாரட்ன கன்னிச்சதம் அடித்து அசத்தினார். இனிங்ஸ்தோல்வியைத் தவிர்க்கும் வகையில் போராடிய அவரால் மேலும் நிலைத்து நின்று ஆட முடியவில்லை. இறுதியில் நேற்று முன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இலங்கை அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 293 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் கருணாரட்ன 363 பந்துகளை எதிர்கொண்டு 17 பவுண்டரிகள் அடங்கலாக 152, ஜே.கே. சில்வா 33, திரிமன்னே 25 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். மற்றும் மத்தியூஸ் ஆட்டமிழககாது 53 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பந்து வீச்சில் போல்ட் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

ஐந்து விக்கெட்டுக்கள் கைவசம் வைத்துள்ள இலங்கை அணி இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க இன்னும் 10 ஓட்டங்களைப் பெறவேண்டியுள்ளது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும். நியூசிலாந்து முதல் இனிங்ஸ் 441. இலங்கை முதல் இனிங்ஸ் 138.


விளையாட்டுச் செய்திகள்

# அஜ்மல் விலகல்

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரிலிருந்து பாகிஸ்தான் அணி வீரர் அஜ்மல் விலகுகிறார். 37 வயதான அஜ்மலின் பந்து வீச்சு விதிமுறைக்குப் புறம்பாக இருப்பதால் 3 மாதத்திற்கு முன்பு தடை விதிக்கப்பட்டது. அவரது முழங்கை அனுமதிக்கப்பட்ட 15 டிகிரியை விட 40 டிகிரிக்கு மேல் வளைகிறது. இதை சரி செய்ய சில மாதங்களாக மேற்கொண்ட முயற்சிக்கு பலன் இல்லாததால் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான அணியிலிருந்து அஜ்மலை நீக்குவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

## ஹோலி, ரஹானே சதம்

# நெருக்கடியிலிருந்து மீண்டது இந்தியா



ஹோலி, ரஹானே ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் நெருக்கடியிலிருந்து இந்திய அணி மீண்டுள்ளது. இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட போடர் - கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டி அவுஸ்ரேலியாவின் மெல்பேர்னில் நடைபெற்று வருகின்றது.

முதல் இனிங்ஸிற்காக ஒரு விக்கெட்டை இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை இந்திய அணி தொடர்ந்தது. மூன்றாம் நாள் ஆட்டத்தின் இரண்டாவது பந்தில் புஜாரா ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் முரளி விஜய்யும் ஆட்டமிழக்க இந்திய அணி நெருக்கடிக்குள்ளானது. இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த ஹோலி, ரஹானே இணை மிகவும் பொறுமையாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தது. இருவரும் அவுஸ்ரேலிய அணியின் பந்துவீச்சாளர்களைப் புரட்டியெடுத்து ஓட்டங்களை வேகமாகக் குவித்தனர். ஒரு முனையில் ரஹானே சதமடித்து அசத்த, மறுமுனையில் ஹோலி (84 மற்றும் 88 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை) வட்சனின் தயவால் தப்பிப்பிழைத்தார். இதன் பின்னர் நிதானமாக ஆடிய ஹோலி சதமடித்து அசத்தினார். இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 262 ஓட்டங்களைப் பெற்றவேளை (ரஹானே) பிரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து களமிறங்கிய வீரர்கள் வந்தவேகத்திலேயே ஆட்டமிழந்து வெளியேற ஹோலி அதிரடியாக ஆடி ஓட்டங்களை வேகமாகக் குவித்தார். இறுதியில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இந்திய அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து 462 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் ஹோலி 272 பந்துகளை எதிர்கொண்டு 18 பவுண்டரிகள் அடங்கலாக 169 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் ஹோலி பதிவு செய்த ஒன்பதாவது சதமாக இது அமைந்தது. அத்துடன் இத்தொடரில் ஹோலி பதிவு செய்த மூன்றாவது சதமாகவும் இது அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மற்றும் ரஹானே 171 பந்துகளை எதிர்கொண்டு 21 பவுண்டரிகள் அடங்கலாக 147 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் ரஹானே பதிவு செய்த இரண்டாவது சதமாக இது அமைந்தது. மற்றும் முரளி விஜய் 68, புஜாரா 25, தவான் 28 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனைய அனைத்து வீரர்களும் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினர். பந்து வீச்சில் ஹரிஸ் நான்கு, நதன் லயன் இரண்டு, ஜோன்சன் இரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இரண்டு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இந்திய அணி 68 ஓட்டங்களால் பின்னிலையில் உள்ளது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும். அவுஸ்ரேலிய முதல் இனிங்ஸ் 530.

# யாழ். இந்துக் கல்லூரியின் சிறந்த பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் வெளியான க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்ற யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களின் விபரங்கள் வருமாறு:

கணிதப் பிரிவில் 3 ஏ பெற்றவர்களின் விபரம் வருமாறு,

பி.டாருகீசன் (மாவட்ட நிலை 1, தேசிய நிலை 1), எம்.சுதர்சன் மாவட்ட நிலை 3, தேசிய நிலை 8,), என்.பத்மபிரியன்(மாவட்ட நிலை 4), ரி.யதுர்சன் (மாவட்ட நிலை 5), எஸ்.கேதாரன் (மாவட்ட நிலை 7), எம்.துமிலன் (மாவட்ட நிலை 8), வி.வாகீ சன் (மாவட்ட நிலை 10), கே.பவளஜன் (மாவட்ட நிலை 11), கே.உமாசுதன் (மாவட்ட நிலை 12), பி.குணவரன் (மாவட்ட நிலை 14), ஆர்.நிரோஜன் (மாவட்ட நிலை 16), ஏ.திருவேந்தன் (மாவட்ட நிலை 19), எஸ்.சிவானுஜன் (மாவட்ட நிலை 25), வி.யர்சிகன் (மாவட்ட நிலை 26), கே.பிரதாபன் (மாவட்ட நிலை 27), எம்.பிரகாஸ் (மாவட்ட நிலை 31), ரி.அருணன் (மாவட்ட நிலை 36), வி:டிலாறறன் (மாவட்ட நிலை 47), பி.சங்கீர்த்தன் (மாவட்ட நிலை 48).

**விஞ்ஞானப் பிரிவு**

கே.கௌசிகாந் (மட்ட நிலை 12), ஜி.விசாகபவன் (மட்ட நிலை 25).

**கலைப்பிரிவு**

எஸ்.பாதுஜன் (மாவட்ட நிலை 18).

**வர்த்தகப் பிரிவு**

பி.சுயந்தன் (மாவட்ட நிலை 26).

**கணிதப் பிரிவு**

2ஏ, பி. பெற்றவர்களின் விபரம்.

எம்.அனோஜன், எஸ்.சாகித்தியன், எம்.டக்சன், வி.மதியுகன், எஸ்.சிவகாந்தன், ஆர்.சஜிந்தன், எஸ்.தர்சன், எஸ்.அம்ப்ரீசன், வை.பிரசாந், ரி.மயுரசாகித்தியன், எம்.பரசுராம், எஸ்.விபிசாந், எஸ்.சாயிநடராஜ், ரி.திவாகரன்.

**விஞ்ஞானப் பிரிவு**

எஸ்.அச்சுதன், பி.டினேசன், எம்.மோகனலக்சன், ரி.யதார்த்தன், கே.பிரியங்கன்,வி.கோகுலன், பி.பிரதீஸ், கே.சிதம்பரவாணன்.

**வர்த்தகப் பிரிவு**

பி.சயந்தன், பி.சுதர்சன்,எம்.ரஞ்சிதன். (48)

# பேருந்து தரிப்பிடம் அமைக்க கோரிக்கை

(அச்சுவேலி)

பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்தியில் பேருந்துத் தரிப்பிடம் இன்மையால் அப்பகுதியில் பேருந்துக்காகக் காத்திருக்கும் பயணிகள் பல்வேறு இன்னங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியில் பேருந்துத் தரிப்பிடம் முன்னர் காணப்பட்டது. பின்னர் வீதி அகலிப்புப் பணிகளுக்காக இத் தரிப்பிடம் அகற்றப்பட்ட நிலையில் இதுவரை அது மீள அமைக்கப்படவில்லை எனவும், இதனால் தாம் பேருந்துக்காகக் காத்திருக்கும்போது பல இன்னல்களை எதிர்கொள்வதாகவும் பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் பிரதான போக்குவரத்து வீதியாகக் காணப்படும் இச்சந்திப் பகுதியில் பேருந்திற்காக காத்து நிற்கும் மக்கள் கால் கடுக்க மழை, வெயில் போன்றவற்றுக்கும் மத்தியில் நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கும் பயணிகள் சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்தப் பகுதியில் பேருந்துத் தரிப்பிடத்தை அமைத்து பயணிகளின் அசௌகரியங்களைப் போக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

# ஏல விற்பனை

எல்.பி. பினான்ஸ் நிறுவனத்தில் அடகுவைத்து இதுவரை மீட்கப்படாத தங்க ஆபரணங்கள் பகிரங்க ஏல விற்பனையில் ஜனவரி 10,17,23,30ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்படவுள்ளன.

நிறுவனத்தில் கிளிநொச்சி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம், மானிப்பாய், சுன்னாகம், நெல்லியடி ஆகிய கிளைகளில் இந்த ஏல விற்பனை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (105)

# கலாபூஷண விருது பெற்ற நாவாந்துறை பாலச்சந்திரன்



(யாழ்ப்பாணம்)

யாழ். நாவாந்துறையைச் சேர்ந்த நீக்கிலஸ் மரியதாஸ் பாலச்சந்திரன் கடந்த 14ஆம் திகதி கலாசார மரபுரிமை அமைச்சினால் வழங்கப்பட்ட கலாபூஷணம் விருதைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

இவர் நாடகம், நாட்டுக் கூத்து, வில்லிசையுடன் பாடகராகவும், நடிகராகவும் நடித்துள்ளார். சாந்தி, பண்டார வன்னியன், அப்பு தந்த சீதனம் ஆகிய நாடகங்களில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்துள்ளார். திருமறைக் கலாமன்றத்தின் பல்வேறு நாடகங்களில் சிறப்பாக பங்காற்றியுள்ளார்.

இலங்கை வானொலியின் கத்தோலிக்க நிகழ்ச்சியான புதிய உலகம், சிறுவர் உலகம் ஆகியவற்றிலும் பங்காற்றியுள்ளார். சிங்கப்பூர் அரச வானொலியிலும் சிறந்த பாடல்களைப் பாடிய பெருமை இவரைச் சாரும்.

இவருக்கு 'தங்கக் குரல்' 'கலாவித்தகர்' 'சிறந்த நாடக கலைஞர்' விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன. மன்னார் மறை மாவட்ட கலை வரலாற்றில் பல சாதனைகளையும் புரிந்துள்ளார்.

மன்னார் விடத்தல் தீவில் அருட்தந்தை டி வில்சன்பற்றிக் தலைமையில் கல்வாரியில் கருணை வெள்ளம் யேசுவின் திருப்பாடுகளின் பெருங்காட்சி நாடகத்தின் பாடல் இசை, எழுத்துருவாக்கம், தயாரிப்பு, நெறியாள்கை ஆகியவற்றை ஏற்று 1997ஆம் ஆண்டு மேடையேற்றி பாராட்டைப் பெற்றுள்ளார். இவரின் பல்துறை கலைப் பணிக்காக இவ்வருடம் கலாபூஷணம் விருது பெற்று கௌரவிக்கப்பட்டுள்ளார். (105)

# திருவாதிரை உற்சவம்

(காரைநகர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் சிவன் ஆலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை திருவாதிரை உற்சவம் ஆரம்பமானது. இவ் உற்சவம் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளன.

ஒன்பதாம் நாளான எதிர்வரும் சனிக்கிழமை பஞ்சரத பவனியும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஆர்த்தனா தரிசனமும் தீர்த்த உற்சவமும் பகல் பக்தர்களின் நேர்த்திக் காவடிகளும் பிற்பகல் திருவூடலும் நடைபெறவுள்ளன.

திருவிழா நாட்களில் மடாலயத்தில் அன்னதானம் வழங்கப்படும்.

அத்துடன் இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் சேவைகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (50)

# வங்கிக் கடன்களை இரத்துச் செய்யுமாறு விவசாயிகள் அமைச்சரிடம் கோரிக்கை

தமது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக 2012-2013 காலப்பகுதியில் வங்கிகளிடமிருந்து கடன்களை பெற்றுக்கொண்ட விவசாயிகள் தமக்கான கடன் தொகைகளை மீளச் செலுத்துவதை இரத்துச் செய்து உதவு மாறு அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வலிகாமம் பகுதி விவசாயிகள் முன்னேற்றச் சங்க பிரதிநிதிகளுடன் இதற்கான சந்திப்பொன்று அண்மையில் அமைச்சரின் யாழ் அலுவலகத்தில் நடைபெற்றது.

நீண்ட யுத்தத்தின் முடிவுக்கு பின்னர் தமது விவசாய நடவடிக்கைகளை தொடரும் எதிர்பார்ப்பில் வங்கிகளிடமிருந்து கடன்களை பெற்றுக்கொண்ட போதிலும் கடந்த சில வருடங்களாக நிலவிய வரட்சி, வெள்ளம், மற்றும் நோய்த்தாக்கங்கள், போதிய சந்தைப்படுத்தல் வசதிகள் இன்மையால் இந்த வங்கிக் கடன்களை உரிய காலத் தில் செலுத்த முடியாமற் போன தாக சங்கத்தின் தலைவர் வீ.மோகநாதன் தெரிவித்தார்.

இவ்வாறான ஒரு பாதிப்பை வலிகாமத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த சுமார் 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் எதிர்கொண்டுள்ளதாகவும் இக் கடன்களை மீளச்செலுத்துவதில் பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும் தலைவர் மேலும் குறிப்பிட்டார்.

தற்சமயம் முகம்கொடுத்துவரும் பிரச்சினைக்குத் தீர்வை காணவும் எதிர்காலத்தில் இந்த விவசாயிகள் தொழிலை திறம்பட முன்னெடுக்கவுமென அமைச்சர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை கையளிக்கும் முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக சங்கத்தின் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

இதற்கான முன்னேற்பாடாக வலிகாமம் பகுதியிலுள்ள அனைத்து விவ சாயிகளும் கலந்துகொள்ளும் மாநாடொன்றை விரைவில் நடாத்தி அனைத்து விவசாயிகளதும் கருத்துக்களை தாம் அறிந்து கொள்ளவிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (24)

# நேத்திரம் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு

(மானிப்பாய்)

இளவாலை வர்த்தக சங்கத்தினரால் 'நேத்திரம்' சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இளவாலை கிராமத்தின் பெருமைகளை எடுத்தியம்ப வேண்டியும் இளவாலையூரின் எழுத்தாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் களம் அமைக்க வேண்டியும் உருவாகி இருக்கும் இந்த இளவாலையூர் வாலிபரின் 'நேத்திரம்' சஞ்சிகை நேற்று முன்தினம் கோலாகலமாக வெளியிடப்பட்டுள்ளது.

இளவாலை புனித அன்னம்மாள் ஆலயமுன்றிலில் மாலை 5.30 மணியளவில் ஆரம்பமான இந்த சஞ்சிகை வெளியீட்டு விழாவில் சஞ்சிகையை வெளியீடு செய்வதற்காக அளவையூர் பிரபல எழுத்தாளரும் சமூக சேவை உத்தியோகத்தருமான சிவராஜா வருகை தந்தார்.

மேலும் இதன் முதற் பிரதியை பெறுவதற்கு யாழின் பிரபல வர்த்தகரான கதிர்காமத் தம்பி வருகைதந்தார் (48)



கிளிநொச்சி சிறுவர் இல்லத்தின் கிறிஸ்மஸ் தின ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றபோது... (63)



# எதற்கும் எல்லை உண்டு




**- மா. ஆறுமுககண்ணன் -**

கடிதப் போக்குவரத்து முற்றிலும் குறைந்து, கைப்பேசிக் குறுந்தகவல் முறையும் பின்தங்கிவிட்டதாகத் தோன்றும் நிலையில், இப்போது பெரும்பான்மையானோரை இணைக்கும் பாலமாக இருப்பவை முகநூல், ட்விற்றர், வாட்ஸ்அப் - ஆகிய மூன்றும்தான்.

முகம் பாராமலேயே உயிருக்குயிராய்ப் பழகிய கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையாரின் "சங்க கால நட்பு", இருபது ஆண்டுகளுக்கு முன்புவரை உலகம் முழுவதும் பரவலாக இருந்த "பேனா நட்பு" ஆகியவற்றின் புதிய பரிமாணம்தான் இவை.

வங்கியில் கணக்கு இருக்கிறதோ இல்லையோ, இந்த மூன்றில் ஏதேனும் ஒன்றில் கணக்கு இல்லையென்றால், நாம் நவீன அறிவியல் உலகில் பல படிகள் பின்னால் இருப்பதாகத் தோன்றிவிடும்.

உலக மக்கள்தொகையில் 126 கோடிப் பேர் முகநூல் பயன்படுத்துகின்றனர். அதாவது, 13 பேருக்கு ஒருவர் முகநூல் இணைப்பில் உள்ளார்.

முகநூல் பயன்படுத்துவோரில் 24 சதவீதம் பேர் 14 முதல் 25 வயதுக்கு உள்பட்டோர். முகநூலில் ஒரு நிமிடத்தில் 24 கோடியே 60 இலட்சம் தகவல்கள் பரிமாறிக்கொள்ளப் படுகின்றனவாம்.

முகநூலை தங்களது புகைப்படங்களின் தொகுப்பாகவும், அதிகாலை தொடங்கி நள்ளிரவு வரை தாங்கள் செய்யும் பணிகள் என்னென்ன என்பதைப் பட்டியலிடவுமே பலர் பயன்படுத்துகின்றனர்.

அதேநேரம், பொது அறிவுத் தகவல்கள், விபத்து அல்லது நோயால் பாதிக்கப்பட்டோருக்கான ரத்தத் தேவை, வேலைவாய்ப்புச் செய்திகள் போன்ற பயனுள்ள செய்திகளும் பகிர்ந்துகொள்ளப்படுகின்றன.

விட்டுப்போன நட்புகளையோ, உறவுகளையோ முகநூல் மூலம் சிலர் தேடிக் கண்டடைகின்றனர்.

ஆனால், பகிர்வுத் திறனை வளர்க்கும் அளவுக்கு முகநூல், படைப்புத் திறனை வளர்க்கிறதா என்பது கேள்விக்குறிதான். ஏனெனில், எங்கிருந்தோ, யாரோ அனுப்புகின்ற ஏதோ ஒன்றை "Forward" அல்லது "Share" அல்லது "Like" செய்யும் பணியே பெரும்பாலும் நடக்கிறது.

சிலர் நாள் முழுவதும் முகநூலே கதி எனக் கிடந்து, உலகின் பல மூலைகளில் இருக்கும் முகம் தெரியாத பலரை நண்பர்கள் பட்டியலில் வைத்து அழகு பார்க்கும் நட்புப் பிரியர்களாக உள்ளனர்.

ஆனால், அத்தகையோர் அண்டை வீட்டுக்காரர்களுடனோ, அலுவலகத்தில் சக ஊழியர்களுடனோ, குடும்ப உறுப்பினர்களுடனோ அன்பை பரிமாறிக் கொள்கின்றனரா என்பது கேள்விக்குறியே.

கண்ணால் கண்டதை உடனுக்குடன் பகிர்ந்து கொள்வதைப்போல, கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் "கண்டதை"ப் பகிர்ந்து கொள்வதும் முகநூலில் அதிகமுள்ளது.

அடுத்தவர் அந்தரங்கத்தில் மூக்கை நுழைப்பது, பெண்களின் பெயர்களில் போலிக் கணக்குத் தொடங்கி மற்றவர்களை ஏமாற்றுவது, அரசியல்வாதிகள், நடிகர் - நடிகைகள் என பிரபலமானவர்களை நியாயமற்ற முறையில் விமர்சிப்பது, ஜாதி - மத மோதல்களைத் தூண்டும் விதத்தில் கருத்துத் தெரிவிப்பது, தேச விரோத சக்திகளுக்கு ஆதரவு திரட்டுதல் போன்ற போக்கும் அதிகரித்து வருகிறது.

எல்லை தாண்டாதவரை எதுவும் அபாயமில்லை என்ற கருத்து இந்தச் சமூக வலைத்தளங்களில் கணக்கு வைத்திருப்போருக்கும் பொருந்தும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும்.

---

- ஐரிஷ் எழுத்தாளர் ஒஸ்கார் வைல்ட் அவர்களது சமாதியை பெண் ரசிகைகள் வெறுமனே பார்த்துவிட்டு வருவதுடன நில்லாது சமாதியை முத்தமிட்டுச் செல்வார்களாம். அவர்களின் லிப்ஸ்டிக்கில் உள்ள இரசாயனப் பொருள்களால் அவரது சமாதி பொலிவிழந்துவிட்டதாம். இதனால் 2011 இல் சமாதியைப் புதுப்பிக்க வேண்டியிருந்தது!

- நேருவுக்கும் அவரது தங்கை விஜயலட்சுமி பண்டிட்டுக்கும் வயது வித்தியாசம் பதினொன்று. விஜயலட்சுமியின் மகள் நயனதாரா சாகல் சிறுவயதில் நேருவிடமே வளர்ந்தார். இப்போது வயது 86. டெல்லியில் ஒரு சிறிய குடிசை போன்ற வீட்டில் வசிக்கிறார்.

இவர், ராகுல், பிரியங்கா இருவரையும் பற்றி கூறுவது:

"ராகுல் 10 வருடமாக எம்.பி.யாக இருக்கிறார். ஆனால் அவர் மக்களிடம் ஒரு பாதிப்பைக் கூட உருவாக்கவில்லை. ஆனால் பிரியங்கா துணிச்சல்காரர்... அதனால் அரசியலுக்குப் பொருத்தமானவர்" என்கிறார்.

- பின்னால் நடப்பதை அறிந்த ஞானி ஹெர்பர்ட் ஜோர்ஜ்வெல்ஸ். தையற்கடைத் தொழிலாளியின் மகனான இவர் விஞ்ஞானத்தில் பட்டம் பெற்றார். எழுத்தாளராகிப் பல நாவல்கள் எழுதினார். இவர் கற்பனை செய்து எழுதிய விஞ்ஞானக் கதைகள் பின்னாளில் உண்மையாக அப்படியே பலித்தன. உலக வரலாறும் எழுதியுள்ளார். "சந்திரனில் முதல் மனிதன்", "கால யந்திரம்", "உலகங்களின் போர்" ஆகியவை இவர் எழுதிய விஞ்ஞான புனைகதைகள். காலம் 1866 - 1946.

- முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கு, தற்போது, 90

---

# கே.வி. மகாதேவன் 46



**- பி.ஜி.எஸ்.மணியன் -**

கே.எஸ். கோபாலகிருஷ்ணனின் கதை வசனம் இயக்கத்தில் வெளிவந்த படம் "கண்கண்ட தெய்வம்". கதைக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளிவந்த இந்தப் படத்தில் எஸ்.வி.ரங்காராவ் - எஸ்.வி. சுப்பையா அண்ணன் - தம்பியாக வந்து நடிப்பில் புதிய பரிமாணத்தை வெளிப்படுத்தி இருந்தனர். சுப்பையாவுக்கு ஜோடியாக பத்மினி.

"ஆண்டவனே சாமியோ நீ கொடுத்த பூமி" - எளிமையான சந்தங்களோடு அழகாக மனத்தைக் கவரும் உடுமலை நாராயண கவிராயரின் இந்தப் பாடலுக்கு மகாதேவன் அமைத்த இசை கிராமியப் பாடல்களில் அவருக்குத் தனி இடத்தைத் தரத் தவறாத பாடல். டி.எம்.எஸ். - பி. சுசீலா இணைவில் ஒரு அருமையான பாடல்.

கந்தன் கருணைக்கு பிறகு வெளிவந்த நடிகர் சிவகுமாரின் படம். அவருக்கு இதில் கூடுதல் ப்ரொமோஷன்! முதல் முதலாக ஒரு டூயட் பாடலுக்கு வாயசைத்து ஆடிப்பாடி அவர் நடித்த படம் இது.

கணுக்கால் வரை மடித்துவிடப்பட்ட காற்சட்டை - ரீ-ஷேர்ட்டுடன் அவர் பாடி நடித்த பாடல் காட்சி. அந்த வகையில் சிவகுமாரின் முதல் பாடல் காட்சிக்கு இசையமைத்த இசை அமைப்பாளர் கே.வி.மகாதேவன்.

"தென்ன மரத்துலே குடியிருக்குற சின்னப் பாப்பா" - டி.எம்.சௌந்தரராஜன் - கேட்பவரைத் தாளமிடவைக்கும் கிராமிய மணம் வீசும் பாடல்.

எம்.ஜி.ஆரின் சகோதரர் எம்.ஜி.சக்ரபாணியின் இயக்கத்தில் வெளிவந்த திரைப்படம் "அரச கட்டளை".

எம்.ஜி.ஆருடன் சரோஜாதேவி - ஜெயலலிதா ஆகிய இருவரும் நடித்த படம். பாடல்கள் அனைத்துமே ஹிட்.

பொதுவாக கவிஞர்கள் தங்கள் சொந்த வாழ்க்கை அனுபவத்தை பாடல்களாக வடிப்பதுண்டு. ஆனால் கவிஞர் வாலி அவர்கள் சொல்கிறார்:

"நான் எப்பவுமே சொந்த வாழ்க்கை அனுபவங்களை பாடல்களாக வடித்ததே இல்லை. ஆனால் அரசகட்டளை படத்துக்கு பாடல் எழுதும் போது என் மன உணர்வை வெளிக்காட்டும் விதமாக எம்.ஜி.ஆரைப் பற்றி ஒரு பாடல் எழுதினேன்."

அந்தப் பாடல்தான் "என்னைப் பாடவைத்தவன் ஒருவன். என் பாட்டுக்கு அவன் தான் தலைவன்". பி.சுசீலா பாடும் இந்தப் பாடல் இன்றளவும் மக்கள் திலகத்தின் புகழ் பாடும் ஒரு பாடலாக அமைந்துவிட்டிருக்கிறது.

"புத்தம் புதிய புத்தகமே" அருமையான டூயட். டி.எம்.எஸ். - பி.சுசீலா.

இதே படத்தில் ஒரு குறிப்பிட்ட காட்சிக்காக கவிஞர் வாலி அவர்கள் "ஆண்டவன் கட்டளைக்கு முன் அரசகட்டளை நிற்குமா" என்று எழுதிக்கொடுக்க முகம் சிவந்த எம்.ஜி.ஆர். அந்த பல்லவியை ஒதுக்கி விட்டு கவிஞர் முத்துக்கூத்தனை அந்தக் காட்சிக்கான பாடலை எழுத வைத்தார்.

"ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை" - என்று தொகையறாவாகத் தொடங்கி "ஆடிவா ஆடிவா ஆடிவா" என்று பாடலாக விரியும் பாடல்தான் அது. டி.எம். சௌந்தரராஜனின் கம்பீரக்குரலில் அவ்வப்போது ஒரு சிறு பிசிறு எட்டிப்பார்க்கும். இந்தப் பாடலில் அந்தப் பிசிறே தெரியாதவண்ணம் அருமையாக மெட்டமைத்து சிறப்பாக இணைப்பிசை கொடுத்து ஒரு மகத்தான வெற்றிப்பாடலாக்கி விட்டிருக்கிறார் கே.வி. மகாதேவன்.

"வேட்டையாடு விளையாடு" - என்ற ஆலங்குடி சோமுவின் பாடல் மட்டும் என்ன? சளைத்ததா?

பாடியவர்கள் டி.எம்.எஸ் - பி.சுசீலா.

"பண்பாடும் பறவையே என்ன தூக்கம் -உன்
பழங்காலக் கதை இன்று யாரைக் காக்கும்"

- பழம் பெருமை பேசி அலையும் மனிதரை பல்லவியிலேயே சாடுகிறார் வாலி. பி.சுசீலாவின் குரலில் உரிமைக்கு கிளர்ந்தெழ வைக்கும் பாடல் இது.

"ஆண்டாண்டு காலமாய் ஆண்ட நாடு
அன்னை தந்தை மக்கள் சுற்றம் வாழ்ந்த நாடு
தோன்றாமல் தோன்றும் வீரர் சொந்த நாடு

என்ற வரிகளில் பெருமிதத்தை வெளிப்படுத்தியவர் சரணத்தின் கடைசி வரியில் "தூங்கித் தூங்கிச் சோர்ந்துவிட்டதிந்த நாடு." என்ற வரிகளில் வெளிப்படுத்தும் பாவம் ஒரு பாடலைப் பாடகியை எப்படி பாடவைக்க வேண்டும் என்பதற்கு சரியான உதாரணம்.

படத்தின் உச்ச கட்ட காட்சியில் இடம்பெறும் "எத்தனை காலம் கனவுகள் கண்டேன் காண்பதற்கு உன்னைக் காண்பதற்கு" - பாடியவர் இசையரசி பி.சுசீலா.

அரச கட்டளை படப்பாடல்கள் கே.வி.மகாதேவனின் புகழுக்கு மேலும் பெருமை கூட்டத் தவறவில்லை.

இதே போல நடிகர் திலகத்துடன் அவர் இணைந்த "பேசும் தெய்வம்" படமும் மனதில் நிலைக்கும் பாடல்களைத் தந்தது.

வாலியின் கற்பனையில் விரிந்த டி.எம்.எஸ். பாடும் "நான் அனுப்புவது கடிதம் அல்ல" - பாடல் இன்றைய ஹைடெக் உலகத்துக்கு சற்றும் பொருந்தாது. என்றாலும் கடிதங்கள் மூலம் காதல் வளர்த்த அன்றைய காதலர்களால் பெரிதும் விரும்பப்பட்ட பாடல்.

"அழகுத் தெய்வம் மெல்ல மெல்ல" - டி.எம்.எஸ் - பி.சுசீலாவின் இணைவில் அற்புதமான பாடல். கானடா ராகத்தின் இனிமை நயம் நம்மை பரவசப் படுத்தும்.

"நூறாண்டு காலம் வாழ்க" - சூலமங்கலம் ராஜலக்ஷ்மி, சரளா, எஸ். ஜானகி குரல் இணைவில் ஒரு அருமையான வாழ்த்துப் பாடல்.

பிள்ளைச் செல்வமே பேசும் தெய்வமே" - எஸ் ஜானகியின் குரலில் இனிமை கொஞ்சும் பாடல்.

பாடல்களும் வெற்றி. படமும் வெற்றி.




(தொடரும்)

# சின்னச் சின்ன...

வயது. இவருக்கு விமானத்தில் இருந்து பாரசூட் மூலம் தரையில் குதிக்கும் விளையாட்டு, மிகவும் பிடிக்குமாம். முதன்முதலில், விமானத்தில் இருந்து குதித்த போது, இவருக்கு ஐந்து வயது. சமீபத்தில், தன், 90ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய புஷ், அனைவரும் வியக்கும்படி, "ஸ்கை டைவிங்" செய்து, பரபரப்பு



ஏற்படுத்தினார். இதுவரை, பதினெட்டு முறை, இவ்வாறு குதித்து, சாகசம் புரிந்துள்ளார்.

☯ வில்லியம் ஷேக்ஸ்பியர் [illegible]7 நாடகங்களும் 154 கவிதைகளும் எழுதியுள்ளார்.

- மனைவியின் பெயர் ஆனி ஹாத்வே.

- ஷேக்ஸ்பியரின் கடைசி நாடக நூல், - தி டெம்பஸ்ட்.

- "லோர்ட் கம்பர்லின்ஸ் மென்" என்ற நாடகக் குழுவில் நடிகராக இருந்தவர் ஷேக்ஸ்பியர்.

- ஷேக்ஸ்பியரின் நினைவு நாள் ஏப்ரல் 23, புத்தக மற்றும் பதிப்புரிமை தினமாகக் கொண்டாடப்படுகிறது.

☯ முதல் கவிதை இதழை நடத்தியவர் பாவேந்தர் பாரதிதாசன். 1935இல் வெளியான அந்த இதழின் பெயர் "கவிதா மண்டலம்" என்பதாகும். முழுக்க முழுக்கக் கவிதையிலேயே வெளியான அந்த மாத ஏட்டில் விளம்பரங்கள்கூட கவிதை வடிவில்தான் வெளிவந்தன.

☯ உப்பு, அமிலம் இவற்றைப் பயன்படுத்தினால் லேசான வாயு உண்டாகும். அதை பலூனுக்குள் நிரப்பினால் பலூன் பறக்கும் என்று பள்ளியில் பாடம் நடந்ததையே நினைத்திருந்த தோமஸ் அல்வா எடிசன், தன் நண்பனிடம் அதே போல் உப்பு, அமிலம் எல்லாம் விழுங்க வைத்து, அவன் பறப்பானா என்று சோதித்திருக்கிறார். நண்பன் மயக்கமடைந்து, உயிருக்குப் போராட, எடிசன் அடி உதைபட்டு அல்லலுக்குட்பட்டாராம்.

☯ இம்மைக்கும், மறுமைக்கும் மனிதன் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்துப் பேச முற்பட்டார் கிருபானந்த வாரியர். மைக் சரியாக இயங்கவில்லை. வேறு ஒரு மைக் பொருத்தப்பட்டது. அதுவும் சரிவர இயங்கவில்லை. மூன்றாவது மைக் பொருத்தப்பட்ட உடனே வாரியார், "இம்மைக்கும்" வேலை செய்யவில்லை. "மறுமைக்கும்" வேலை செய்யவில்லை" என்று கூற, ஒரே சிரிப்பலை.

# செவ்வாய் கிரகத்தில் மெதேன் வாயுக் கசிவு


– என்.ராமதுரை –

**செ**வ்வாய் கிரகத்தின் நிலப்பரப்பிலிருந்து திடீர் திடீரென மெதேன் வாயு கசிவதாக அமெரிக்காவின் கியூரியாசிடி நடமாடும் ஆராய்ச்சிக்கூடம் கண்டறிந்துள்ளது. ஆளில்லாத இந்த ஆராய்ச்சிக்கூடம் தானாக இயங்கி ஆங்காங்கு ஆராய்ந்து வருகிறது.

செவ்வாயின் நிலப்பரப்பிலிருந்து திடீர் திடீரென மெதேன் வாயு வெளிப்படுவதை கியூரியாசிடி கண்டுபிடித்து [illegible] தகவல் அனுப்பியுள்ளது. இது முக்கியமான கண்டுபிடிப்பாகும்.

ஏனெனில் உயிரினத்துக்கும் மெதேன் வாயுவுக்கும் நேரடித் தொடர்பு உண்டு. பூமியில் உயிரினம் காரணமாக நிறையவே மெதேன் வாயு வெளிப்படுகிறது. கால்நடைகளின் வயிற்றிலிருந்து மெதேன் வாயு வெளிப்படுகிறது. நெல் வயல்களிலிருந்து கணிசமான அளவில் மெதேன் வெளிப்படுகிறது. சதுப்பு நிலங்களிலும் இயற்கையாக மெதேன் வாயு உற்பத்தியாகிறது. மெதேன் தீப்பற்றும் தன்மை கொண்டது.

சதுப்பு நிலங்களில் வெளிப்படும் மெதேன் இரவு நேரங்களில் சில சமயங்களில் தற்செயலாகத் தீப்பிடிப்பது உண்டு. ஒரு காலத்தில் இதைக் கண்டவர்கள் கொள்ளி வாய்ப் பிசாசு என்றும் கருதினர். உண்மையில் இது



கொள்ளி வாயு அதாவது மெதேன் வாயு என்பது பின்னர் தான் கண்டறியப்பட்டது.

ஓரிடத்தில் நீண்ட நாள் குப்பையைப் போட்டு வைத்தால் இயல்பாக அதில் மெதேன் உற்பத்தியாகும். சில நாடுகளில் பெரிய அளவிலான குப்பை மேடுகளிலிருந்து மெதேன் வாயுவை சேகரித்துப் பயன்படுத்துகின்றனர். சாண வாயு என்பதும் பெரிதும் மெதேன் வாயு தான். கறையான்[illegible] மெதேன் [illegible] உற்பத்தியாகிறது.

கடல் பகுதியிலும் நிலப் பகுதியிலும் மிக ஆழத்திலிருந்து எரிவாயு எடுக்கப்படுவது பற்றி அறிந்திருக்கலாம். எரிவாயுவில் பெரும் பகுதி மெதேன் வாயு ஆகும். ஏதோ ஒரு காலத்தில் இருந்த தாவரங்களும் விலங்குகளும் மிக ஆழத்தில் புதையுண்டு கடும் வெப்பத்துக்கும் அழுத்தத்துக்கும் உள்ளான போது தோன்றியதே எரிவாயு ஆகும். பூமியில் உள்ள மெதேனில் 95 சதவிகிதம் நுண்ணுயிர்களால் தோற்றுவிக்கப்படுவதாகும். ஆனால் புவியியல் காரணங்களாலும் மெதேன் வாயு தோன்றுவது உண்டு. அதாவது சில வகைப் பாறைகளும் நீரும் சேரும்போது மெதேன் வாயு உற்பத்தியாகிறது.

கியூரியாசிடி செவ்வாயில் இறங்கி காற்று மண்டலத்தை ஆராய்ந்த போது மெதேன் வாயு 0.7 ppbv அளவுக்கே இருப்பதாகக் கண்டறிந்தது. இத்துடன் ஒப்பிட்டால் பூமியின் காற்று மண்டலத்தில் இந்த வாயு 1800 ppbv அளவுக்கு உள்ளது.

எனினும் கடந்த இரண்டு மாதங்களில் சுமார் நான்கு தடவைகளில் கியூரியாசிடியின் கருவிகளில் வழக்கத்தை விட பத்து மடங்கு மெதேன் வாயு பதிவாகியது. இவ்விதம திடீர் திடீரென மெதேன் வாயு அளவு அதிகரிப்பதற்கு அந்த வாயு செவ்வாயின் நிலத்துக்குள்ளிருந்து கசிவதே காரணமாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

எனினும் செவ்வாயில் காணப்படும் மெதேன் வாயு இப்போது அல்லது கடந்த காலத்தில் இருந்திருக்கக்கூடிய நுண்ணுயிர்களால் தோற்றுவிக்கப்பட்டதா அல்லது புவியியல் காரணங்களால் தோற்றுவிக்கப்பட்டதா என்பதை கியூரியாசிடியினால் கண்டறிய இயலவில்லை. செவ்வாயின் மெதேன் நுண்ணுயிர்கள் காரணமாகத் தோன்றுவதே என்று தெரிய வந்தால் அக்கிரகத்தில் இப்போது அல்லது கடந்த காலத்தில் நுண்ணுயிர்கள் இருந்தன என்று சொல்ல முடியும்.

அப்படியில்லாத நிலையில் செவ்வாயில் மெதேன் வாயு அவ்வப்போது வெளிப்படுவதை வைத்து எதையும் உறுதியாகக் கூற முடியாத நிலை உள்ளது.




# மறைந்த இயக்குனர் கே.பாலச்சந்தர்

– சி.ரமேஷ் -

**"இன்றைக்கு இருக்கிற ட்ரெண்ட் என்னை பயமுறுத்துது. சுப்பிரமணியபுரம் படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். கழுத்தை அறுக்கிற காட்சியைப் பார்க்கச் சக்தி இல்லாம கண்களை மூடிக்கொண்டு கடவுளே என்று உறைந்துவிட்டேன். ஆனால் தியேட்டரே எழுந்து நின்று கைதட்டியது. வன்முறையை இந்தளவுக்குக் கொண்டாடுற மனசு ரசிகனுக்கு வந்துவிட்டது. இந்த மனநிலைக்குத் தீனி போடுற படத்தை என்னால பண்ண முடியாது. சமூக ரசனைக்கும் நம்முடைய மனநிலைக்கும் பெரிய இடைவெளி விழுந்திட்டால் நாம 'ஃபீல்ட் அவுட்' என்றுதானே அர்த்தம்.'**

**- பாலச்சந்தர்**

**த**மிழ்நாடு தஞ்சாவூர் மாவட்டத்தில் நல்லமாங்குடி என்ற கிராமத்தில் கைலாசம் -காமாச்சியம்மாள் தம்பதிக்கு 1930 ஜூலை 30 பிறந்தார். இளம் வயது முதலே நாடகங்களில் அதிக ஈடுபாட்டுடன் இருந்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.எஸ்சி. முடித்தார். நாடகத்துறையில் இருந்து திரைப்படத்துறைக்கு வந்த பாலச்சந்தர் நடிகர் நாகேஷை வைத்து நீர்க்குமிழி என்ற படத்தை இயக்கினார். எதிர் நீச்சல், மேஜர் சந்திரகாந்த், பாமாவிஜயம், அரங்கேற்றம், சொல்லத்தான் நினைக்கிறேன், அபூர்வ ராகங்கள், அவள் ஒரு தொடர்கதை, வறுமையின் நிறம் சிகப்பு, மூன்று முடிச்சு, புன்னகை மன்னன், உன்னால் முடியும் தம்பி என இவருடைய படங்கள் அனைத்தும் பெரும் வரவேற்பை பெற்றன.

தமிழ் திரையுலகில் இன்றைய ஜாம்பவான்களாக ஜொலிக்கும், ரஜினிகாந்த், கமலஹாசன், பிரகாஷ்ராஜ் இவருடைய அறிமுகங்களே..

அவள் ஒரு தொடர்கதை போன்ற சில திரைப்படங்களை முழுக்க முழுக்க புதுமுகங்களை வைத்தே இயக்கியிருந்தார். ஃபடாஃபட் ஜெயலட்சுமி, ஸ்ரீபிரியா, விஜயகுமார், ஜெய்கணேஷ் ஆகியோர் அறிமுகமான இது ஒரு வெற்றிப்படமாகவும் அமைந்தது. பட்டினப்பிரவேசம் திரைப்படத்திலும், டெல்லி கணேஷ், சிவச்சந்திரன் போன்றோரை அறிமுகம் செய்தார்.

மேலும், பிற மொழியிலிருந்தும் சிலரை தமிழில் அறிமுகப்படுத்திய பெருமையும் இவருக்கு உண்டு. அவர்களுள் சுஜாதா (அவள் ஒரு தொடர்கதை), ஷோபா (நிழல் நிஜமாகிறது), சரத்பாபு (நிழல் நிஜமாகிறது), சரிதா (தப்புத்தாளங்கள்), பிரகாஷ்ராஜ் (கல்கி) ஆகியோர் அடங்குவர்.

எஸ்.வி. சேகர் (வறுமையின் நிறம் சிகப்பு) மற்றும் மௌலி (நிழல் நிஜமாகிறது) ஒய். ஜி. மகேந்திரன் (நவக்கிரகம்) மற்றும் காத்தாடி ராமமூர்த்தி (பட்டினப்பிரவேசம்) என, முன்னரே நாடக மேடையில் புகழ் பெற்றிருந்த சிலரை திரைக்கு பாலச்சந்தர் அறிமுகப்படுத்தினார். எம்.ஆர். ராதாவின் மகன் ராதாரவியை அறிமுகப்படுத்தியவர் இவரே.


தமிழ் தெலுங்கு கன்னடம் இந்தி உள்ளிட்ட மொழிகளில் இதுவரை 101 படங்களை இயக்கியுள்ள பாலச்சந்தர், இறுதியாக பொய் என்ற படத்தை இயக்கினார்.

தனது கல்லூரித் தோழர் எம்.எஸ். உதயமூர்த்தியுடன் இணைந்து "கவிதாலயா" என்னும் திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தையும் நிறுவினார். இதன் மூலமாக பிற இயக்குனர்களின் கைவண்ணத்தில் பல திரைப்படங்களை அளித்துள்ளார். அவற்றில் நெற்றிக்கண், ராகவேந்தர், சிவா ஆகியவை குறிப்பிடத்தக்கவை.


தான் இயக்கிய சின்னத்திரை நாடகங்களில் அவ்வப்போது நடித்தும் வந்தார். கடைசியாக கமலஹாசன் நடித்துள்ள உத்தம வில்லன் படத்தில் நடித்தார். இந்தப் படம் வெளியாகி அதனைப் பார்க்கும் முன் அவர் உயிரிழந்துவிட்டார்.

மூச்சுத்திணறல் காரணமாக 23.12.2014 அன்று பாலச்சந்தர் உயிரிழந்தார்.

# நிகழ்வுகளின் பதிவுகள்




ஏழாலை முத்தமிழ் கலாசார மண்டபத்தில் சுன்னாகம் பொலிஸாரின் நடமாடும் சேவையின் இறுதி நாள் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர உரையாற்றுவதையும், கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (54)



வவுனியா கிருபை சிறுவர் இல்லத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட கிறிஸ்மஸ் நிகழ்வு அண்மையில் வவுனியா கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இதில் ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிவைத்தார். (70)




இளவாலை ஐ.ரி.எஸ் கணனிப்பயிற்சி நிலையத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான நத்தார் பண்டிகை கடந்த வியாழக்கிழமை நடைபெற்றபோது... (48)




யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் கற்கை நிலையத்தில் ஊடக டிப்ளோமா சான்றிதழ் பயிற்சி நெறியைப்பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். பல்லைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றபோது... (48)



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஏற்பாட்டில் இராணுவத்தினரால் யாழ் வலுவுடையவர்களுக்கான நடமாடும் சேவை அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட அலுவலர்களை காணலாம். (77)



காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தில் கடந்த வியாழக்கிழமை மகரஜோதி பெருவிழா வெகுசிறப்பாக நடைபெற்றபோது... (50)



கோண்டாவில் ஐயப்ப சுவாமியின் மணிகண்ட மகரஜோதி மண்டலப் பெருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் ஐயப்பசுவாமி நகர் வலம் வந்தபோது...

# சுனாமி நினைவாலயத்தை புனித பூமியாக்கும் அமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி தெரிவிப்பு

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பலியானோருக்கான உடுத்துறை சுனாமி நினைவாலயப் பகுதியை புனித பூமிப்பிரதேசமாக பிரகடனம் செய்யவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள அறிவிப்புக்கு தமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதாக உடுத்துறை கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி கிழக்கு அமைப்பாளருமான பொ.பிரேமதாஸ் தெரிவித்தார்.

சுனாமியில் சிக்குண்டு மரணித்த பொதுமக்களுக்கான 10 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சமயம் அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இந்த அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து 10ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் மரணித்தோருக்கான அஞ்சலி நிகழ்வுகளை சில சக்திகள் தமது அரசியல் நோக்கங்களுக்கு பயன்படுத்த முனையும் ஒரு சூழலில் அமைச்சர் இந்த ஆழிப் பேரலையில் மரணித்தோருக்கு அஞ்சலி செலுத்தவென் நினைவு மண்டபம் அமைக்கவுள்ளதாக விடுத்துள்ள அறிவிப்புக்கு உடுத்துறை கடற்றொழிலாளர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் 1350 அங்கத்தவர்கள் மற்றும் வடமராட்சி கிழக்கு பிரதேச மக்கள் சார்பாக தனது நன்றியை தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரின் புனிதபூமி பிரகடனத்துக்கான இந்த அறிவிப்பை சுனாமியால் மரணித்த மக்களுக்கான அஞ்சலி நிகழ்வாக மாத்திரமன்றி இனி வருங்காலங்களில் இயற்கை அனர்த்தங்களிலிருந்து மக்கள் தற்காத்துக் கொள்வதற்கான அறிவூட்டல் மற்றும் விழிப்புணர்வுக்கான முன்னோடி நடவடிக்கையாகவும் நாம் கருதவேண்டுமென பிரேமதாஸ் குறிப்பிட்டார்.

# சமாதானமும் அமைதியும் நிறைந்த நாட்டை கட்டியெழுப்பவேண்டும்

## ஈ.பி.டி.பி. அமைப்பாளர் ஜீவன் அழைப்பு

இலங்கை மக்கள் அனைவரும் சமாதானத்துடனும் அமைதியுடனும் சமத்துவத்துடனும் வாழ்வதற்கு சிறந்த ஒரு நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்றும் அதற்கு மக்களாகிய நாம் இன, மத, சாதி வேறுபாடின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன் வர வேண்டும் எனவும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வலிகாம அமைப்பாளரும் வலி. மேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சி தலைவருமாகிய சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

எம்.ஜி.ஆர் விளையாட்டுக் கழகமும் வருத்தப்படாத வாலிபர் சங்கமும் இணைந்து அண்மையில் நடாத்திய எம்.ஜி.ஆர் நினைவுதின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மக்களிடம் அழைப்பு விடுத்திருந்தார்.

எம்.ஜி.ஆரின் ஆட்சியைப் போலவே தாமும் தமது கட்சியும் மக்களுக்காகவும் மக்களின் நல்வாழ்வுக்காகவும் தொடர்ந்து உழைத்துக் கொணடிருப்போம் எனவும் தெரிவித்தார். இந் நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான பொருட்களையும் அவர் வழங்கியிருந்தார். மேலும் இந் நிகழ்வில் இளைஞர் அணி உப தலைவர் சி.சோமலோஜன் வலி.மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் செ.செல்லக்குமார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



காரைநகர் துறைமுகம் சித்திரகூட சித்தி விநாயகர் ஆலயம் முழுமையான கருங்கற்களினால் அமைக்கப்பட்டு வருவதையும் அவ் ஆலயத்தில் 60 அடி உயரமான இரு கோபுரங்கள் அமைக்கப்படவுள்ள நிலையில் அவ்வேலைகளை துரிதப்படுத்தும் நோக்கில் கருங்கற்களை வெட்டும் இயந்திரம் பொருத்தப்பட்டு பாரிய கற்கள் வெட்டப்பட்டு வருகின்றமையை காணலாம்.(50)

# கிளிநொச்சியில் கனமழை 4,604 பேர் இடப்பெயர்வு

## கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தகவல்

கிளிநொர்ச்சி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்தமையால் 1376 குடும்பங்களைச் சேர்ந்த 4,604பேர் இடம்பெயர்ந்து 11 தற்காலிக நலன்புரி நிலையங்களிலும் நண்பர்கள். உறவினர் வீடுகளிலும் தங்கியிருப்பதாக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் நேற்று தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் காரணமாக 4,673 குடும்பங்களை சேர்ந்த 16 ஆயிரத்து 906 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2105 வீடுகள் பகுதியளவிலும், 6 வீடுகள் முற்றாகவும் சேதமடைந்துள்ளன. புதுமுறிப்பு பகுதியிலுள்ள 4 வீடுகளும், அம்பாள் நகர், பெரியபரந்தன் ஆகிய பகுதியைச் சேர்ந்த தலா ஒவ்வொரு வீடும் முற்றாக சேதமடைந்தன.

கண்டாவளை, கரைச்சி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே அதிகம் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி நிவாரணங்கள் மற்றும் இடம்பெயர்ந்த மக்களுக்கான சமைத்த உணவுகள் என்பன வழங்கும் நடவடிக்கையை அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதியுதவியுடன் முதற்கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

ஆண், பெண் இருபாலாருக்கும் கண்டி, கொழும்பு, நீர்கொழும்பு ஏனைய பிரதேசங்களில் நீங்கள் விரும்பியவாறு ஏராளமான வேலைவாய்ப்புகள், வீட்டுப் பணிப்பெண்கள், டிரைவர்ஸ், காவலாளிகள், ரூமத் போய்ஸ், நோயாளி பராமரிப்பாளர்கள், காட்னர், ஹவுஸ் போய்ஸ், குக்கர்ஸ், கப்பல்ஸ் அனைவருக்கும் உணவு, தங்குமிடம் இலவசம்.

சம்பளம் 20,000 /= - 40,000/=

கிளைகள் :- கொழும்பு 0115234281,

நீர்கொழும்பு - 0315678052

கண்டி - 081 56835229

---

இம்முறை க.பொ.த சாதாரணதர பரீட்சை முடித்த அனைவருக்கும் வேலைவாய்ப்பு 49,000/ஸ்ரீ வரையான சம்பளம் EPF, ETF சலுகைகளுடன் இரத்தினபுரி, வத்தளை, கடுவலை, ஹங்வல்ல, நாரஹேன்பிட்டி, அவிசாவளை, கந்தான, கண்டி, கேகாலை, பதுளை, பண்டாரவளை, நுவரெலியா, ஹட்டன் போன்ற பிரதேசங்களில் கோடியல், ஜேம், கிளவுஸ், சொக்லேட், டொபி, ஆடை உற்பத்தி, பொதியிடல், லேபல் பிரிவுகளுக்கு வயது 18 -55 வரை.

ஆண்பெண் தேவை. உணவு, தங்குமிட வசதியுடன் வருகை தரும் நாளிலேயே வேலை வாய்ப்பு.

தொடர்புகளுக்கு :- 0770734757

---

வெள்ளவத்தையில் இயங்கும் பிரபல புடைவை கடைக்கு வேலையாட்கள் விற்பனையார்கள் ஆண், பெண் தேவை.

தங்குமிட வசதி உண்டு. சம்பளம் வேலை அனுபவத்திற்கு ஏற்ப பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்க :- 0112504470, 0112500098

---

சிறிய கோழிப்பண்ணைக்கு வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு :- 0372057178, 0777803664

---

யாழ்ப்பாணத்தில் பேக்கரி ஒன்றிற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு ஆட்கள் தேவை.

1. போரணை பாஸ், கேக், பிஸ்கட் போடத் தெரிந்தவர்கள்
2. பட்டா லொறி ஓட்டுநர்

தொடர்புக்கு 0726999325

---

முறுக்கு, மிக்சர் செய்யக்கூடிய பாஸ் தேவை.

தொடர்புகளுக்கு :- 0754105230

---

விநியோக நிறுவனத்திற்கு கணக்குப் பதிவாளர், கணக்கு பதிவு, பயிலுநர், அலுவலக உதவியாளர் தேவை.

தொடர்புகளுக்கு :- 0754105230

---

இரும்பு ஏற்ற மற்றும் இறக்க ஊழியர்கள் தேவை. அடிப்படை சம்பளம் 26,000/=

தொடர்புகளுக்கு :- 0777124531

---

வெளிநாட்டில் இருந்து வந்திருக்கும் எங்கள் சிறிய முஸ்லிம் குடும்பத்திற்கு (சமையல், கிளீனிங்) வேலைகள் செய்யக்கூடிய மும்மொழியும் தெரிந்த நம்பிக்கையான 20 - 50 வயதுக்குட்பட்ட பணிப்பெண் தேவை.

சம்பள்ம் :- 18,000/= - 20,000/=

தொடர்புகளுக்கு :- 0737869204, 0115920344

பகல், இரவு ஹோட்டலுக்கு அனைத்து வேலையும் தெரிந்த ஊழியர்கள், வெளியிட்டர், முச்சக்கரவண்டி ஓட்டுநர் தேவை.

தொடர்புகளுக்கு :- 0775540493

# பரீட்சார்த்தப் பயணம் வெற்றி






25 வருடங்களின் பின்பு காங்கேசன்துறைக்கான புகையிரதப் பரீட்சார்த்த சேவை நேற்று இடம்பெற்றது.



## பரமர் சங்கமம்

'கெட்ட பின்ஞானி' எண்ட கூற்று மனிதனுக்கு உடலும் வலுவும் குறைந்த பின்பாகவே தோன்றுகிறதெனக் கூறப்படுகிறது. அப்பவாழும் காலங்களில் ஞானம் இல்லாமலா வாழ்ந்தான் வாழ்கிறானெண்டதை ஏற்க முடியாமல் இருக்கு.

விளங்கியும் வில்லங்கமாக அதனைச் செய்யக் கூடாதெண்ட மனோ நிலையை என்னெண்டு கூறலாம்? கர்வம் அகம்பாவம் எண்டுதான் சொல்ல வேணும் அத்தகைய ஒருவர் அடங்கிப்போய் கொழும்பு மட்டக்குளியில் ஒதுக்குப் புறமான மகனது வீட்டில் முடங்கிக் கிடக்கிறார்.

பரமருக்கு 60 களில் தன்னுடைய மாசிகை மல்லிகையில் இடமளியாமல் இருட்டடிப்புச் செய்து வந்த மல்லிகை ஜீவா எனப்படும் மூத்த படைப்பாளி டொமினிக் ஜீவாவைச் சமீபத்தில் அங்கு போனபோது நண்பர் மா.பாலசிங்கத்துடன் சென்று சந்திக்க முடிந்தது. தினக்குரல் காரியாலயம் போய்த்திரும்புகையில் ஜீவாவைப் பார்க்க நண்பர் அழைத்தார்.

உள்ளதை உள்ளபடி எழுதுறவன் ஜீவாவின் பொய் முகங்களை முன்பாக எழுத்தில் காட்டி இருந்தேன். என்னைக் கண்டதும் கொதித்து எழலாம். ஆயினும் உண்மைக்குப் புறம்பாக எழுதவில்லையே அதுவுமில்லாமல் ஆடி அடங்கிப் போயிருக்கும் ஒருவரைப் காணாமற் திரும்பினாலோ அது நாகரீகமாகாது.

நானும் பாலசிங்கமும் அவர் தங்கி இருந்த அறைக்குச் சென்று பார்க்கையில் ஜீவாகட்டிலில் ஒருக்கழித்துச் சரிந்து முளிப்புடன் படுத்துக் கிடந்தார் இடதுகை இலேசாக நடுங்கிக் கொண்டிருந்தது. அசுமாத்தத்தை உணர்ந்த ஜீவா கிடையில் கிடந்தபடி திரும்பிப் பார்த்தார்.

என்னைக் கண்டதும் துள்ளி எழுந்து பரபரப்பாக என்னையும் பாலாவையும் வரவேற்றார். இப்பவும் உமது கட்டுரையைத்தான் வாசித்துக் கொண்டிருந்தன். கூறியவர் பத்திரிகையைத் தேடினார் எம்மை அமரச் செய்து உரையாடுகையில் நான் பிழை விட்டிட்டன்; மல்லிகை அட்டைப் படத்தில் என்னைப் போடபடமெல்லாம் ஆயத்தப் படுத்தியதாகவும் அது முடியாமல் போனதாகவும் கூறி வேதனைப்பட்டார்.

முன்னொருக்கா பாலசிங்கம் கொழும்பால் வந்து என்னைச் சந்தித்துக் கதைக்கையில் என்னடா ஜீவாவுக்கும் உனக்கும் பிரச்சினை உன்ரை படத்தை மல்லிகை அட்டைப் படத்தில் போட மாட்டேன்னுறான் எண்டு சொன்னவர் என் னால வெளியிடப்பட்ட புதிய படைப்புலகம் பூமணி இரு நூல்க ளையும் அவருக்குக் கொடுத்தேன்

விடைபெறுகையில் 50 சிறுகதைகள் அடங்கிய டொமினிக் ஜீவா கதைகள் நூலை எனக்கு அன்பளிப்பாகத் தந்தார் வீதியில் இறங்கி வருகையில் பாலசிங்கம் முன்பு சொன்ன அட்டைப்படக் கதையை இருவரும் சிலாகித்துக் கொண்டு நடந்தோம்.

நான் பிழை விட்டிட்டன் எண்டு ஜீவா கூறியகதையைச் சொல்லி இப்ப உணர்ந்தென்ன பயன் என்றேன். கெட்ட பின்பு ஞானம் தோன்றுதா இல்லை குற்றம் உணர்வு உறுத்துகிறதா சொல்லுங்க பாப்பம்...

# காணாமற் போனோர் பற்றிய விசாரணை


## ஜப்பானிய நிபுணர் வடக்கு வருகிறார்

காணாமற் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு கிளிநொச்சி மாவட்டத்துக்கு விஜயம் செய்ய வுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்துக் கான அமர்வுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதியி லிருந்து 27ஆம் திகதி வரை இடம்பெறும் என அந்த ஆணைக் குழுவின் பேச்சாளர் கெலி எமது செய்திப் பிரிவுக்குத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகை யில்,

கிளிநொச்சி மாவட்டத்துக் கான விஜயத்தின்போது ஆணைக்




குழுவுக்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட ஜப்பான் அதிகா ரியும் வருகை தரவுள்ளார்.

இதுவரை காணாமற் போனோர் தொடர்பாக 20 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற் றுள்ளன.

இவற்றில் 15 ஆயிரம் முறைப் பாடுகள் யுத்தத்தினால் பாதிக்கப பட்டவர்களிடம் இருந்து கிடைக்கப் பெற்றமை ஆகும்.

இந்த நிலையில் இரண்டா யிரம் முறைப்பாடுகளே பரிசீ லனை செய்யப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் ஜனவரி யிலிருந்து விசாரணைகளை ஆரம்பிக்க ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அத்துடன் எதிர்வரும் பெப்ரவரி மாதமளவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவுக்கு இடைக்கால அறிக்கை ஒன்றையும் கைய ளிக்க தீர்மானித்துள்ளோம் என காணாமற போனோர் தொடர்பா முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு வின் பேச்சாளர் மேலும் தெரி வித்துள்ளார்.

# தேர்தல் முடிவுகளை வெளியிடும் அதிகாரம் தகவல் திணைக்களத்துக்கு இனி இல்லை

(கொழும்பு)

உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் உரி மையை அரசாங்க தகவல் திணைக்களத்திடம் இருந்து தேர்தல்கள் ஆணையாளர மகிந்த தேசப்பிரிய பெற்றுள்ளார்.

இதன்படி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் அதற்கு அடுத்து இடம்பெறும் தேர்தல்களின் முடிவுகளை தேர்தல்கள் செயலகமே வெளி யிடவுள்ளது என கொழும்பிலி ருந்து வெளியாகும் சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகளை இதுவரை காலமும் அரசாங்க தகவல் திணைக் களமே வெளியிட்டுவந்தது.

கடந்த 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல் மற்றும் கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல்கள் தொடர் பாக எதிர்க்கட்சி உள்ளிட்ட பலர் பல்வேறு வகையிலான முறைப் பாடுகளை செய்து வந்துள்ளனர்.

இந்த முறைப்பாடுகளைக் கருத்திற் கொண்டே அரசாங்க தகவல் திணைக்களத்தின் வசமிருந்த இந்த உரிமையை தேர்தல்கள் ஆணையாளர் தன தாக்கிக் கொண்டுள்ளதாகவும் அந்தச் செய்தியில் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

# மக்கள் மாற்றத்தை விரும்புவது ஏன்?

## தம்பர அமிலதேரர் விளக்கம்


அரசாங்கம் ஜனநாயகத்தை நிலைநாட்டத் தவறியுள்ளதாக ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழக விரிவுரையாளர் தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த ரீதியாக தோற்கடிக்கப்பட்ட தன் பின்னர் அரசாங்கம் ஜன நாயகத்தை நிலைநாட்டத் தவறி யுள்ளதாகவும் இதன் காரணமா கவே அரசாங்கத்திற்கான மக்களின் ஆதரவு வீழ்ச்சியடைந் துள்ளது என அவர் குறிப்பிட் டுள்ளார்.

பல்வேறு தியாகங்களின் பின்னரே தமிழீழ விடுதலைப் புலிகள் இல்லாதொழிக்கப்பட் டதாகத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் இல்லா தொழிக்கப்பட்டதன் பின்னர் அரசாங்கம் நாட்டில் ஜனநாய கத்தை நிலைநாட்டத் தவறியுள் ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் பிழையான வழிநடத்தல்கள் காரணமாகவே மக்கள் மாற்றமொன்றை



எதிர்பார்க்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

**(15) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக**

01. கல்வி / பிள்ளைகள் / கற்க / அனைவரும் / வேண்டும்

..............................................................................

02. வணக்கம் / நின்று / கூறினோம் / நாங்கள் / அனைவரும் / எழுந்து

..............................................................................

03. மேடையில் / பாடினார்கள் / சிலர் / நண்பர்கள் / ஏறி

..............................................................................

04. வாழ்க்கையில் / படித்து / நன்றாக / வேண்டும் / முன்னேற

..............................................................................

05. பேச்சு / எமக்கு / அதிபரது / தந்தது / உற்சாகத்தை

..............................................................................

**(16) இடைவெளிக்குள் வரவேண்டிய பொருத்தமான எழுத்தை எழுதுக**

01. வா........த்தினர்
02. உ.........சாகம்
03. உ........மைகள்
04. பெற்.......ர்கள்
05. கு.......ந்தைகள்
06. கைகு.....க்கி
07. அ...வரும்
08. மகி....ந்தோம்

**(17) பின்வரும் தலைப்பில் மூன்று வாக்கியம் எழுதுக**

பசுமையான வயல் வெளி

01 ..............................................................................
02..............................................................................
03..............................................................................

**நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்**

(01) 1. புலவன் 2. தங்குதடை 3. வள்ளல் 4. குமணன் 5. வேண்டுகின்றேன் 6. செங்கோல் 7. வறுமை
(02) 1. ஆறஅமர 2. கண்ணும் கருத்துமாக 3. வற்றிவரண்டு 4. கரடுமுரடு
(03) 1. பகை 2. மறைவான திறமை
(04) 1. கண்ணன், இராமன், பீற்றர், சமன் ஆகியோர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றுள்ளனர்.
2. தோமஸ் அல்வா எடிசன் முயற்சி திருவினையாக்கும் என்பதற்கு இணங்க வெற்றி பெற்றார்.
(05) 1. உய்வுண்டாம் 2. செய்ந்நன்றி
(06) 1. பரந்து 2. ஊறிக் 3. அரிய 4. இறங்கினர்
(07) 1. எனக்கு இப்போது வரமுடியும் 2. தயவுசெய்து அமைதியாகவும்
(08) 1. mayI come in? 2. please stop
(09) 1. விளையாட்டு மைதானம் எங்கு உள்ளது? 2. ஆசிரியர் எத்தனை மணிக்கு வருவார்?
(10) 1. 1 2. 3 3. 3 4. 1 5. 3 6. 4 7. 3 8. 3 9.4 10. 1 11. 4 12. 2 13. 1 14. 4 15. 2 16. 2 17. 3
(11) 1. வடமாகாணம், மேல்மாகாணம் 2. அனுராதபுரம், பொலன்னறுவை 3. மாத்தறை 4. லக்ஷபான
(12) 1. 02 2. 05 3. 8 4. 2லீற்றர் 5. $\frac{1}{10}$, 0.2, 0.5, $\frac{3}{4}$ 6. 1440.00 7. 1440.00 8. 4km 9. 12.30 10. 3550ml 11. 70km 12. 110.00 13. 60cm 14. 1) 180, 220 2) 1700, 3000 15. $\frac{3}{8}$ 16. 126kg 18. 105

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



**தரம் - 4 பரீட்சை முன்னோடி- 2015**

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



**(01) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக**

நாம் எமது உடலை சுத்தமாக வைத்திருப்பது அவசியம். கண்களை பாதுகாக்க சுத்தமான நீரினால் கழுவுதல் வேண்டும். குறைவான வெளிச்சத்தில் எதையும் பார்க்கக் கூடாது. ஓடும் வாகனத்தில் இருந்து வாசிக்கக்கூடாது. தொலைக்காட்சி பார்த்தல் கூடாது. இது போல நமது உடலின் எல்லா உறுப்புக்களையும் பாதுகாக்க வேண்டும்.

01. கண்களை பாதுகாக்க என்ன செய்ய வேண்டும்? ..............................
02. கண்களுக்கு கேடு விளைவிக்கும் விடயங்கள் இரண்டு தருக?
1.................................. 2..................................
03. அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பதால் யாது நிகழும்?..............................
04. உடல் ஆரோக்கியத்தை காப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? ..............................

**(02) ஒத்த கருத்துச் சொற்களை தருக**

01. நோய்கள் - .............................. 02. சுத்தம் - ..............................
03. நீர் - .............................. 04. உடல் - ..............................
05. வெளிச்சம் - .............................. 06. கண்கள் - ..............................

**(03) நீங்கள் வாழ்க்கையில் நலமாக வாழ கடைப்பிடிக்கும் நற்பழக்கவழக்கங்கள் நான்கை எழுதுக**

01..............................................................................
02..............................................................................
03..............................................................................
04..............................................................................

**(04) எதிர்கருத்துச் சொற்களை தருக**

01. ஏற்றம் ..............................
02. இன்பம் ..............................
03. மேடு ..............................
04. காப்பு ..............................
05. தோன்றுகின்றது ..............................

**(05) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக**

01. வானொலியை கண்டுபிடித்தவர் யார்? ..............................
02. உமக்கு தெரிந்த விகடகவி ஒருவரின் பெயரை எழுதுக? ..............................
03. ஆத்திசூடியை இயற்றியவர் யார்? ..............................
04. எட்டயபுரத்தில் பிறந்த தமிழ் புலவரின் பெயர் யாது? ..............................
05. ஓடி விளையாடு பாப்பா பாடலை பாடிய புலவர் யார்? ..............................

**(06) எனது பாடசாலை என்ற தலைப்பில் 5 வாக்கியங்கள் எழுதுக. எழுவாய், பயனிலை, தொடர்பு அமைய வேண்டும்**

01..............................................................................
02..............................................................................
03..............................................................................
04..............................................................................
05..............................................................................

**(07) உறுப்பமைய பார்த்தெழுதுக**

01. நோய்கள் இன்றி நலமாக வாழ வேண்டும்
..........................................................................................

01. ______________________________

..........................................................................................

02. ______________________________

..........................................................................................

03. ______________________________

**(08) அடைப்புக்குள் உள்ள படங்களைப் பயன்படுத்தி வினாக்களுக்குரிய விடைகளைத் தருக**



01. கறி சமைக்க உதவும் பூ ..........................................

02. கறி சமைக்க உதவும் காய் ..........................................

03. கறி சமைக்க உதவும் கிழங்கு ..........................................

04. சம்பல் செய்ய உதவும் கீரை ..........................................

05. சாப்பிட உதவும் பழம் ..........................................

**(09) புதிர்களுக்கான விடைகளைக் கண்டு பிடித்து புள்ளிக்கோட்டில் எழுதுக**

01. உடல், பச்சை, சொண்டு, சிவப்பு, ஒரு பறவை ..........................................

02. பால் தரும், சாதுவானது, பயனுடையது ..........................................

03. உரசும், கத்தும், எலி பிடிக்கும் ..........................................

04. பறக்கும், நோயைப்பரப்பும், நீரில் முட்டையிடும் ..........................................

05. கொக்கரிக்கும், முட்டையிடும், வீட்டில் வாழும் ..........................................

**(10) கீழேயுள்ள அட்டவணையில் இலக்கங்களும், எழுத்துக்களும் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி இலக்கங்களுக்குரிய சொற்களை எழுதி கருத்துள்ள வாக்கியங்களாக்குக**

| | | | |
|---|---|---|---|
| 1. அழகாக | 2. அனைவரும் | 3. மலிவாக | 4. கலைவிழா |
| 5. பொருட்கள் | 6. தீவு | 7. எங்கள் | 8. உள்ளது |
| 9. இலங்கை | 10. பெற்றோரை | 11. சந்தையில் | 12. உடற்பயிற்சி |
| 13. கவர்ந்தது | 14. மாணவர்கள் | 15. உள்ளன | 16. ஓர் |
| 17. அழகிய | 18. செய்தனர் | 19. வகுப்பு | 20. மிகவும் |

01. 7 19 1 8 ..........................................

02. 14 2 12 18 ..........................................

03. 9 16 17 6 ..........................................

04. 11 5 3 15 ..........................................

05. 4 10 20 13



**(11) இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து எழுதுக**

01. தபாலகம் செல்வோம் .......................... (கடிதம், முத்திரை) வாங்குவோம்

02. .......................... (முத்திரை, கடிதம்) அனுப்புவோம்

03. தொலைபேசியில் .......................... (பார்ப்போம், பேசுவோம்)

04. நூலகம் செல்வோம் .......................... (பாடல்கள், நூல்கள்) பல படிப்போம்


05. .......................... (பத்திரிகைகள், பாடல்கள்) வாசிப்போம்


06. செய்திகளை .......................... (கொடுப்போம், அறிவோம்)

**(12). பின்வரும் உருக்களுக்குப் பொருத்தமான சொல்லை புள்ளிக்கோட்டில் எழுதுக**

01. ..........................  தோட்டத்தில் புல் மேயும்

02. நான் ..........................  சாப்பிட்டேன்

03. நான் வானில் ..........................  விட்டேன்

04. தம்பி ..........................  வாசித்தான்

05. ..........................  எலி பிடித்தது

**(13) பின்வரும் வாக்கியங்களில் உள்ள பயனிலைச் சொற்களைத் தெரிந்து எழுதுக**

01. குயில் அழகாக கூவியது ..........................................

02. பூக்கள் காலையில் பூத்தன..........................................

03. தம்பி பந்து விளையாடினான் ..........................................

04. வெள்ளை முயல் ஓடியது ..........................................

05. நான் பழம் சாப்பிட்டேன் ..........................................

**(14) பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக**

ஒருநாள் அப்பாவும், அம்மாவும் என்னைப் பாடசாலைக்கு அழைத்துச் சென்றனர். பாடசாலை வாசலில் சிறுவர் தின விழா என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது. வாசலில் நின்ற ஆசிரியர்கள் எங்களை இன் முகத்துடன் வரவேற்றனர். மைதானத்தின் நடுவில் ஒரு அழகிய மேடை அமைக்கப்பட்டிருந்தது. சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள் போன்ற பல நிறங்களில் பலூன்கள் கட்டப்பட்டிருந்தன.

01. யாருடன் நீங்கள் பாடசாலைக்கு சென்றீர்கள் ..........................................

02. பாடசாலை வாசலில் எழுதப்பட்டிருந்த வாசகம் யாது? ..........................................

03. அங்கு காணப்பட்ட பலூன்கள் நிறங்களை குறிப்பிடுக? ..........................................

04. வாசலில் நின்றபடி உங்களை வரவேற்றவர்கள் யார்? ..........................................

05. சிறுவர் தினம் எந்த மாதத்தில் கொண்டாடப்படும்? ..........................................

# அபிவிருத்தியை தக்க வைத்துக் கொள்வதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

உங்களது தேவைகள் எதுவோ அவை உங்களிடம் இதுவரை முழுமையாக வந்து சேரவில்லை என்பது தான் வேதனையான விடயம். பிறக்கவுள்ள புதுவருடத்தில் தற்போது கிடைத்து வருகின்ற வசந்தங்களை தக்கவைப்பதும் கை நழுவிப் போகவிடுவதும் உங்கள் கைகளில்தான் இருக்கின்றது – என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளருமாகிய கே.வி. குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட நீதியில் பெண்களைத் தலைமையாக கொண்ட குடும்பங்களை உள்ளடக்கிய "அமரா" அமைப்பினரின் ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று முன்தினம் அதன் தலைவர் கே.றஜிதா தலைமையில் கைதடி ஸ்ரீ விநாயகர் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் சிறப்பு விருந்தினராக ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகனும் கலந்துகொண்டிருந்தனர். நிகழ்வில் சிறப்பு விருந்தினராக உரையாற்றும் போதே வி.கே.ஜெகன் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது –

மாற்றங்கள் வருவதனூடாகத்தான் ஒவ்வொரு பகுதியிலும் மாற்றங்கள் நடைபெற்று வருகின்றது. அத்த கைய மாற்றம் தமிழர் அரசி யலிலும் வரவேண்டும் என்ப துதான் மக்களை நேசிக்கும் ஒவ்வொருவரினதும் எதிர்பார்ப்பாகவுள்ளது.

தமிழ் மக்களது அபிவிருத்தியையும் அரசியல் தீர்வையும் ஒரே தட்டில் வைத்துப பார்ப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

தமிழ் மக்களது அரசியற் தலைமையை அமைச்சரது கரங்களுக்கு தமிழ் மக்கள் கொடுப்பார்களானால் நிச்சயமாக ஒட்டு மொத்த தமிழ் மக்களுக்கும் விடிவு விரைவில் கிடைத்துவிடும். பெண்களை தலைமையாக கொண்ட குடும்பங்களின் இந்த அமரா அமைப்பினது பிரச்சினைக்கள் அமைச்சரது பார்வைக்கு கொண்டுவரப்பட்டுள்ளமையால் வெகு விரைவில் உங்கள் ஒவ்வொருவரினதும் வாழ்க்கையில் மாற்றங்களைக் காண்பீர்கள்.

இந்த அமைப்பில் 3000 ற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இருப்பதனால் உங்களது குரல்கள் நிச்சயமாக ஒவ்வொருவரின தும் காதுகளையும் சென்றடையும். இதனூடாக உங்கள் தேவைகளை நீங்கள ஒருமித்த கருத்துடன் பெற்றுக்கொள்ள வும் முடியும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு "அமரா" அமைப்பற்கு அவர்களது தேவைகளுக்கேற்ப நிதி இந்த வாரத்துக்குள் ஒதுக்கித்தரு வதாக உறுதியளித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

மேலும் இந்த நிகழ்வில் முன்னாள் மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா வுடன் 1000 மேற்பட்ட "அமரா" அமைப்பு உறுப்பினர்களும் ஈழமக்கள் ஜனநாயக கட்சி உறுப்பினர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

# ஆளுநர் அலுவலகத்தில் சிறப்புற நடைபெற்ற ஒளிவிழா



(யாழ்ப்பாணம்)

ஆளுநர் அலுவலகத்தில் ஒளிவிழா நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. வட மாகாண ஆளுநர் ஜிஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

வணக்கத்திற்குரிய பாதிரியார் மைக்மில்லன் மரியதாஸ் விசேட விருந்தினராக கலந்து கொண்டார். பெருமளவான சிறுவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். அவர்களுக்கு ஆளுநர் பரிசில்களை வழங்கினார்.

வட மாகாண பிரதம செயலாளர் திருமதி.விஜயலட்சுமி ரமேஸ், வட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் ஆளுநர் அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மார்கழித் திருவெம்பாவை

## இன்று 3 ஆம் நாள்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரம்பொருளான சிவபெருமானைப் புகழ்ந்தும் அவருடைய அருட்பெருங்கருணையை வியந்தும் மணிவாசக சுவாமிகளால் திருவாய் மலர்ந்து அருளிச் செய்யப்பெற்ற தித்திக்கும் தீந்தமிழ்ப் பனுவல் திருவாசகம்.

அந்த இனிய திருவாசகத்தில் வரும் ஓர் இனிய பகுதிதான் திருவெம்பாவை. அந்த விசேட பதிகமான திருவெம்பாவை பத்து நாட்களுக்கு எல்லா ஆலயங்களிலும் ஓதப்படுகின்றது.

அந்தத் திருவாசகத்தேனின் துளிகளான "திருவெம்பாவை இருபது" பாடல்களையும் அதற்கான பொருள் விளக்கத்துடன் தினம் இரண்டு பாடல்கள் வீதம் "தினமுரசு" வாசகர்களுக்குத் தருகின்றோம். படித்துப் பயன்பெறுக.

**திருவெம்பாவை**



மாலறியா நான்முகனும் காணாமலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய் பழறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாழச் சிவனே சிவனே என்று
ஒலமிழனும் உணராய்! உணராய்! காணே!
ஏலக்குழலி பரிசேலோர் எம்பாவாய்!

**பொருள்விளக்கம்.**

இறைவன் எல்லையில்லாத கருணைமலை. அந்த மலையை பிரம்மாவும் விஷ்னுவும் கூடக் காணமுடியவில்லை. அப்பேர்ப்பட்ட அருள் மலையை நாம் அறிந்து விடலாம். இவ்வாறு எல்லோரும் நம்பும்படி அப்பட்டமான பொய்யை பாலும் தேனும் ஒழுகப் பேசிய வாயையுடைய பெண்ணே நீ பொல்லாத வஞ்சகி. வந்து வாசல் கதவைத் திறப்பாயாக. சிவபெருமான் விண்ணவராலும் மண்ணவராலும் அறிய முடியாதவன். அவனுடைய அருட் திருக்கோலத்தையும் எளியவர்களாகிய எம்மை ஆட்கொண்டு அருளிய பெருங்குணத்தையும் நாங்கள் பாடுகின்றோம். சிவனே! சிவனே!! என்று ஓலமிட்டுப் பாடுகின்றோம் இச் சத்தம் உனக்குக் கேட்கவில்லையா? இதைக் கேட்டு நீ நித்திரைவிட்டு விழிக்கிறாயில்லையே! நல்ல மணம் வீசுகின்ற கூந்தலையுடையவளே! இதுதான் உன்னுடைய தன்மை போலும் சீக்கிரம் எழுந்து வராய் பிரமனாலும் விஷ்னுவாலும் அறிய முடியாத சிவனை நாமும் பணிந்து துதித்து நிற்போம் என்பதாம்.



மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே எழுப்புவன் என்றலும்நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாழ வந்தோர்க்குன் வாய் திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.

**பொருள் விளக்கம்.**

அழகிய மான்போல மருண்டு மருண்டு பார்க்கின்ற கண்களையுடையவளே! நாளைக்கு நானே வந்து உங்களையெல்லாம் எழுப்புவேன்" என்று நேற்று நீ சொன்னாயே! உனக்கு வெட்கமில்லையா? அந்தச் சொல் எந்தத் திசையில் போயிற்று என்பதை நீயே சொல் உனக்கு இன்னமும் பொழுது விடியவில்லையா? வானுலகத்தாரும் இந்த நிலவுலகத்தாரும் பிற உலகத்தாரும் அறிதற்கரிய ஒளிமயமானவன் சிவபெருமான். அந்த முழுமுதற்கடவுனான சிவபெருமானுடைய மேலான உயர்ந்த கழலணிந்த திருவடிகள் எளியவர்களாகிய நமக்கு தானாகவே வந்து நம்மைக் காப்பாற்றி ஆட்கொண்டு அருள்வனவாகும் .அந்த அரிய பெரிய திருவடிகளைப் பாடிக்கொண்டு வந்த எங்களிடம் வாய்திறந்து பேசுகின்றாயில்லை. என் உடலும் உருகுவதாயில்லை. உனக்குத்தான் இந்நிலை பொருந்தும். எங்களுக்கும் மற்றவர்களுக்கும் தலைவனாகிய சிவபெருமானைப் பாடுவாயாக. அவ்வாறு சிவனைப்பாடுவது தவிர வேறென்ன வேலை என்பதாம்.

* * *

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

# விசா விதிகளில் மாற்றம்

சவூதி அரேபியாவில் பணிபுரியும் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் விசா காலத்தை 6 மாதமாக குறைக்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது

இதுதொடர்பாக, ரியாத்தில் அந்நாட்டு கடவுச்சீட்டு துறை அதிகாரி தெரிவிக்கையில்,

வெளிநாட்டுத் தொழிலாளர்களின் குடும்பங்கள் இங்கு வந்து தங்கிச் செல்வதற்காக வழங்கப்படும் விசா அனுமதி காலத்தை, 6 மாதங்களாக குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்றார்.


# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................

முகவரி :- ........................................

பிறந்த ஆண்டு :- ........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும் :- ........................................

பெற்றோர் கையொப்பம்

# பயணிகள் விமானம் வான்வெளியில் மாயம்
# உலகை உலுக்கிய மற்றுமொரு சம்பவம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் சுரயபோ நகரத்திலிருந்து சிங்கப்பூரிற்கு 162 பேருடன் பயணித்துக்கொண்டிருந்த விமானம் மாயமாகிள்ளது.

எயர்ஏசியா விமான சேவைக்கு சொந்தமான ஏ320-200 விமானமொன்று காணாமற்போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியா ஜுவான்டா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சிங்கப்பூருக்கு ஏர் ஏசியாவிற்கு சொந்தமான ஏர்-பஸ் ஏ320-200 விமானம் நேற்று காலை 5:30 மணிக்கு புறப்பட்டு சென்றது. விமானத்தில் 155 பயணிகளும், 7 ஊழியர்களும் பயணத்தினர்.



ஏர்ஏசியா விமானத்தின் எண் 8501 ஆகும். விமானம் சிங்கப்பூர் விமான நிலையத்திற்கு வழக்கமாக காலை 830 மணிக்கு சென்றடையும். ஆனால் நேற்று வழகத்திற்கு மாறாக விமானத்தின் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

தொடர்பு துண்டிப்பு

காலை 5:30 மணிக்கு இந்தோனேஷியாவில் புறப்பட்டு சென்ற விமான்ம், விமான கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது. இதுதொடர்பான தகவல்கள் வெளியாகி பெரிதும் அச்சத்தை ஏற்படுத்தியது.

சிங்கப்பூர் சென்றடைய வேண்டிய ஏர்ஏசியா விமானம், விமான கட்டுப்பாட்டு அறை தகவல் தொடர்பிலிருந்து விலகியது. தகவல் பறிமாற்றம் துண்டிக்கப்பட்டது. விமானம் வழக்கமான பாதையில் இருந்து விலகிச் சென்றுவிட்டது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே இந்தோனேஷியாவின் சுராபாயா நகரில் இருந்து சிங்கப்பூர் நகருக்கு சென்ற ஏர்ஏசியா விமானம் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பில் இருந்து நேற்றுக்காலை 7:24 மணியளவில் விலகி சென்றதை உறுதி செய்வதில் நாங்கள் மிகவும் வருத்தம் அடைகிறோம் என்று ஏர்ஏசியா டுவிட்டரில் தகவல் தெரிவித்தது.

தேடும் பணி தீவிரம்

சிங்கப்பூர் நோக்கி சென்ற விமானம் ஜாவா கடற்பகுதிக்கு மேல் பகுதியில் சென்றபோது கட்டுப்பாட்டை இழந்தது என்று போக்குவரத்து துறை அதிகாரி ஹாதி முஸ்தபா செய்தியாளர்களிடம் தெரிவித்தார். விமானம் காலிமன்டான் மற்றும் பெலிடங் தீவிற்கு இடைப்பட்ட பகுதியில் சென்றபோது , தொடர்பை இழந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

விமானம் கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பை விட்டு விலகியதை அடுத்து மாயமான ஏர்ஏசியா விமானத்தை தேடும் பணியில் அதிகாரிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். இந்தோனேஷியா அதிகாரிகளால் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் எடுக்கப்பட்டு வருகிறது, என்று ஏர் ஏசியா தெரிவித்தது.

149 இந்தோனேஷியர்கள

மாயமான விமானத்தில் பயணம் செய்தவர்களில் பெரும்பாலானோர் இந்தோனேஷியாவை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது.7 ஊழியர்கள் உட்பட 162 பேர் மாயமான விமானத்தில் பயணம் செய்தனர் என்று இந்தோனேஷியா டி.வி. செய்திகள் வெளியிட்டுள்ளன.

விமானத்தில் பயணம் செய்தவர்களில் 149 பேர் இந்தோனேஷியாவை சேர்ந்தவர்கள். கொரிய. நாட்டை சேர்ந்த 3 பேரும், மலேசியா, சிங்கப்பூர் மற்றும் பிரிட்டனை சேர்ந்த தலா ஒருவர் பயணம் செய்தனர் என்று . தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள் மற்றும் குழந்தைகளும் இதில் அடங்கும்.

ஜாவா கடற்பகுதியில் விழுந்தது


மாயமான விமானம் ஜாவா கடற்பகுதியில் விழுந்து விபத்தில் சிக்கியது என்று சி.சி.டி.வி. செய்தி வெளியிட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. பெலிடன் கடற்பகுதியில் விமானத்தின் பாகங்கள் கிடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இத்தகவல் அரசு தரப்பிலோ, ஏர்ஏசியா தரப்பிலோ உறுதி செய்யப்படவில்லை. தொடர்ந்து விமானத்தை தேடும் பணிகள் முழுவீச்சுடன் நடைபெற்று வருகிறது.

உலகச் செய்திகள்

3 ஆவது மிகப்பெரிய விமான விபத்து

மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் இருந்து சீனாவின் தலைநகரான பீஜிங்கிற்கு 239 பேருடன் புறப்பட்டுச் சென்ற விமானம் கடந்த மார்ச் 8 ஆம் திகதி அதிகாலை நடுவானில் மாயமானது. இந்திய பெருங்கடலில் தொடர்ந்து தேடுதல் வேட்டை நடைபெற்றது. இருப்பினு[illegible] அதன்கதி என்ன என்பது குறித்து இதுவரை உறுதியான தகவல் ஏதுமில்லை. இந்நிலையில் ஏர்ஏசியா விமானமும் மாயமாகியுள்ளது பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏர்ஏசியா விமான நிறுவனம், பயணிகளின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் தகவல் தொடர்பு வசதிக்காக 622129850801 என்ற உதவி மையஎண்ணை தொடர்புகொள்ளலாம் என்று தெரிவித்துள்ளது.

## பா.ஜ.க.வால் ரஜனிக்கு நெருக்கடி



பா.ஜ.க.வில் சேர தொடர்ந்து ரஜினிக்கு அழைப்பு விடுத்தும், அவர் சேர மறுப்பதால் அவருக்கு நெருக்கடி அதிகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரஜினியை தங்களது கட்சியில் சேர வைக்க வேண்டும் என ஒவ்வொரு கட்சியும் போட்டிப் போட்ட வண்ணம் உள்ளது.

இதில் குறிப்பாக ரஜினிகாந்த பா.ஜ.க.வில் சேரப் போவதாக பா.ஜ.க.உறுப்பினர்கள் சிலர் பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் வதந்திகளை பரப்பி வருகின்றனர். ஆனால் ஒரு கட்டத்தில் பா.ஜ.க.வில் சேருவது இயலாத காரியம், ரசிகர்களுக்கு அது உகந்ததாக இருக்காது என்பதையும் அவர் தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

எனினும் ரஜினிக்கு பெரும் தொகை கொடுக்க பா.ஜ.க பேசி வருகிறது. பா.ஜ.காவின் இந்த வதந்திகளால் ரஜினியின் ரசிகர்கள் விவாதிக்க ஆரம்பித்து விட்டனர்.

அவர் எந்தக் காலத்திலும் பா.ஜ.க அல்லது வேறு கட்சிகளில் சேரமாட்டார். ஒரு பேச்சுக்குக் கூட அவர் யாரிடமும் இதை விவாதித்ததில்லை. அப்படி ஒருவேளை அவர் அரசியலுக்கு வருவதாகவே இருந்தாலும், அவர் தனியாகத்தான் வருவார் என கூறியுள்ளனர்.

## ஆப்கான் எல்லையில் தாக்குதல்
## 1 இலட்சத்துக்கு மேற்பட்டோர் பாதிப்பு

(பெஷாவர்)



பெஷாவர் இராணுவப் பள்ளியில் தீவிரவாதிகள் நடாத்திய தாக்குதலை தொடர்ந்து, தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளை பாகிஸ்தான் அரசு கடுமையாக்கி வருகிறது. வடக்கு வஜிரிஸ் தான் மற்றும் ஆப்கன் எல்லைப் பகுதியில் பதுங்கியுள்ள தலிபான் தீவிரவாதிகளை குறிவைத்து, நாள்தோறும் தாக்குதல்கள் நடாத்தப்படுகின்றன.

தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படும் 6,777 பேரை கைது செய்ய முடிவு செய்யப்பட்டு, அவர்களில் நூற்றுக்கணக்கானோர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். மேலும், தீவிரவாதிகளின் கூட்டம் நடைபெறும் இடங்கள் என சந்தேகிக்கப்படும் கட்டடங்கள் பூட்டப்பட்டு, சீல் வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் உள்ள பாகிஸ்தான் இராணுவ நிலைகளை குறிவைத்து, தலிபான் தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் திடீர் தாக்குதலை நடாத்தினர்.

இதையடுத்து, ஆப்கன் எல்லைப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, கண்காணிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. நேற்று முன்தினம், நடாத்தப்பட்ட வான்வெளித் தாக்குதலில், 2 தீவிரவாத தளபதிகள் உட்பட சுமார் 55 பேர் கொல்லப்பட்டனர். கடந்த ஜுன் மாதம் தொடங்கிய, தீவிரவாதத்துக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில், 1,200 தீவிரவாதிகள் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர்.

## எபோலாவுக்கு மருந்து
## சீனா கண்டுபிடிப்பு



உலக நாடுகளை அச்சுறுத்தி வரும் வைரஸ்சான எபோலாவை தடுப்பதற்கான தடுப்பு மருந்தை சீனா கண்டுபிடித்துள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடுகளான லைபீரியா, கினியா, சியாரா, லியோன் ஆகியவற்றில் 7000 இற்கும் மேற்பட்ட மனித உயிர்களைக் காவு வாங்கிய எபோலா வைரஸ் உலக நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில் கொடிய எபோலா வைரஸ் பரவுவதை தடுப்பதற்கான தடுப்பு மருந்தை சீனா கண்டுபிடித்துள்ளது. மேலும் அந்த மருந்தினை இம்மாத இறுதியில் மனிதர்களுக்கு செலுத்தி சோதனை செய்யவுள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டுப் பாதுகாப்புத்துறை செய்தித் தொடர்பாளர் யாங் யுஜுன் கூறுகையில், இராணுவ மருத்துவ அறிவியல் அகாடமியால் இந்த தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும், அரசாங்கமும் இராணுவ அதிகாரிகளும் சமீபத்தில் இந்த தடுப்பு மருந்துக்கு அனுமதி அளித்துள்ளதால் இந்த மாதத்தில் இதற்கான மருத்துவ சோதனைகள் தொடங்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

## 60 ஆண்டுகளுக்கு பின்னர்
## மியன்மாரில் மாநகராட்சி தேர்தல்

(யங்கூன்)



60 ஆண்டுகளுக்கு பிறகு முதன் முறையாக மியன்மார் தலைநகர் யங்கூனில் நேற்று மாநகராட்சி தேர்தல் நடந்தது. வேட்பாளர்களை பற்றியோ, அவர்களது கொள்கைகள் குறித்தோ அதிகம் தெரியாத நிலையில் யங்கூன் நகர மக்கள் உற்சாகத்துடன் வாக்களித்தனர்.

மியன்மாரில் இராணுவ ஆட்சி நடைபெறுகிறது. அதைத் தொடர்ந்து அங்கு அடக்குமுறை அதிகம் இருந்தது. 2011 ஆம் ஆண்டுக்கு பிறகு தற் போது அங்கு ஓரளவு ஜனநாயகம் மலர்ந்துள்ளது. அதை தொடர்ந்து அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் அங்கு பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது.

# எதிர்பார்க்க முடியாத அபிவிருத்தியை வடக்கில் ஏற்படுத்தியவர் ஜனாதிபதி

## உதயன் எம்.பி. தெரிவிப்பு



வடபகுதியானது முப்பது வருட காலத்தின் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் யாராலும் எதிர்பார்க்க முடியாத அளவிற்கு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

வேலணைப் பிரதேசத்திற்குட்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் சுயதொழில் புரிவோருக்கான உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன. இவற்றுள் கடலை பதனிடும் உபகரணங்கள், சிகை அலங்கரிப்பு நிலைய உபகரணங்கள், மோர் மிளகாய் உற்பத்திக்குரிய உபகரணங்கள், கருவாடு பதனிடும் உபகரணங் கள் ஆகியவையும் சுயதொழி லாக கோழி வளர்ப்பதற்காக கோழிக்கூடு மற்றும் கோழிக் குஞ்சுகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில்,

மாகாணசபை தேர்தலூடாக அதிகாரத்தினை மக்கள் வழங்கிய போதும் மக்களின் நலன்களிலோ அவர்களின் தேவைகளிலோ நாட்டம் வரவில்லை. இவ்வாறான அரசியல்வாதிகளை தற்போது மக்கள் இனங்கண்டு விட்டனர்.


மக்களின் வாழ்வு இன்னல்களில் இருந்து விடுபட்டு வறுமையெனும் இருளிலிருந்து புதியதோர் வரும். காலத்திற்கு தொடர்ந்து செல்வதற்கு மக்கள் தமது நலன்களின் மீது அக்கறை செலுத்துவோருடன் அணிதிரள வேண்டும் மக்களின் தேவைகளை அன்றாடம் தனது இணக்க அரசியலினூடாக தீர்வினைப் பெற்று தமிழ் பேசும் மக்களின் ஒளிமயமான எதிர்காலத்தை மட்டுமே சிந்திப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

வடபகுதி மக்களிற்கு இவ் ஜனாதிபதியின் சேவையானது தொடர்ந்தும் அத்தியாவசியமாகவுள்ளது மக்கள் தமது எதிர்காலத்தினை ஒளிமயமாக்க வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பெரும்பான்மையான வாக்குகள் மூலம் வெல்ல வைக்க வேண்டுமெனக்கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

வேலணை பிரதேசசபை தவிசாளர் சிவராசா (போல்) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வான்பாய்கிறது வவுனிக்குளம் போக்குவரத்து துண்டிப்பு



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக வன்னியில் சகல குளங்களும் நீர்நிரம்பி வான் பாய்கின்ற நிலையில் போக்குவரத்துப் பாதைகள் நீரில் மூழ்கியுள்ளன.

வன்னியின் பெரிய குளங்களில் ஒன்றான வவுனிக்குளம் வான்பாய்வதால் விநாயகபுரம் துணுக்காய் வீதியும் பறங்கி ஆறு வான்பாய்வதால் சிராட்டிகுளம் நெட்டாங்கண்டல் வீதியும் மற்றும் பாண்டியன்குளம் செல்வபுரம் துணுக்காய் வீதிகளும் நீர் குறுக்கறுத்து பாய்வதால் போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை வவுனிக்குளம் அணைவழியாக போக்குவரத்தினை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. தற்போதும் சீரற்ற காலநிலை காரணமாக தொடர்ந்து பரவலாக பலத்த மழை பெய்துவருவது குறிப்பிடத்தக்கது.

# வெற்றுக் காணியிலிருந்து பழைய கைக்குண்டு மீட்பு

யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியரின் வீட்டிற்கு அருகாமையில் உள்ள வெற்றுக்காணியில் இருந்து பழைய கைக்குண்டு ஒன்று இராணுவத்தினரால் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

யாழ். கச்சேரி காட்டுக்கந்தோர் வீதியில் உள்ள வெளிநாட்டவர்களின் காணியினைத் துப்புரவு பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் கைக்குண்டினைக் கண்டு, யாழ். பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இந்தத் தகவலை பொலிஸார் இராணுவத்தினருக்கு தெரிவித்து, இராணுவத்தின் குண்டு செயலிழக்கும் பிரிவினர் கைக்குண்டினை மீட்டுள்ளனர். (25)

# எதிர்பார்த்த பெறுபேறு இல்லை; கொக்குவில் மாணவி தற்கொலை

உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினை பெற்றுக் கொள்ளவில்லை என்ற மன அழுத்தத்தில் தூக்கிட்டு மாணவி தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவியான தவராசா மஞ்சுஜா (வயது-19) என்ற மாணவியே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

2014 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டன.

உயர்தர மாணவர்கள் அனைவரும் தமது பெறுபேற்றினை எதிர்பார்த்து பரீட்சை பெறுபேறுகளைப் பார்த்த நிலையில், பல மாணவர்களின் பெறுபேறுகள் எதிர்பார்த்த வகையில் அமையவில்லை.

இந்த நிலையில், யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் கலைப்பிரிவில் பரீட்சை எழுதிய மாணவியான இவர், தனது பரீட்சைப் பெறுபேற்றினை நேற்று முன்தினம் பார்த்துள்ளார்.

பெறுபேறுகள் இரண்டு சி மற்றும் ஒரு எஸ் வந்ததையிட்டு மன அழுத்தத்தில் வீட்டில் இருந்துள்ளார். வீட்டில் கடைசிப் பிள்ளையான இவர், நேற்று சகோதரியுடன் வீட்டில் இருந்த போது, அறைக்குள் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

இந்த நேரம் குறித்த பாடசாலை ஆசிரியரான தாயார் சாதாரண தரப் பரீட்சை வினாத் தாள்கள் திருத்தும் பணிக்காக பாடசாலைக்குச் சென்றுள்ளார்.

அதன்போது, குறித்த மாணவி தற்கொலை செய்துள்ளார். பின்னர் சகோதரி சென்று பார்த்த போது, தூக்கில் தொங்கிய நிலையில், இருப்பதைக் கண்டு, பெற்றோருக்கு அறிவித்துள்ளார். அதன்பின்னர் பெற்றோர் யாழ். பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

பின்னர், யாழ்.நீதவான் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தினை பார்வையிட்ட பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த மாணவியின் சடலம் தொடர்பான விசாரணையினை யாழ்.பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (25)

# தேர்தலில் யாருக்கு ஆதரவு முடிவெடுக்காத கூட்டமைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்று நேற்றைய கூட்டத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவெடுக்கவில்லை. இன்னும் ஓரிரு தினங்களில் முடிவை அறிவிப்பதென்று தீர்மானித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின ஒருங்கிணைப்புக் கூட்டம் நேற்று மாலை கொழும்பு மாதிவெலயில் நடைபெற்றது. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக நீண்டநேரமாக கலந்துரையாடப்பட்டது.

இதன் போது இரு வேட்பாளர்களிடமிருந்தும் தமிழ் மக்களுக்கு இருக்கக் கூடிய பாதகமான விடயங்கள் தொடர்பாக கூட்டத்தில் பங்கேற்ற பிரதிநிதிகளால் எடுத்துக் கூறப்பட்டது.

அத்துடன் ஆட்சி மாற்றத்தின் அவசியம் குறித்தும், எதிரணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்கள் சம்பந்தமாக எதுவுமே குறிப்பிடப்படாத விடயம் பற்றியும், தமிழ் மக்களது பிரச் சினைகள் சம்பந்தமாகவும் நீண்ட நேரமாக கலந்துரையாடப்பட்டது.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவை அதன் தலைவர் இரா.சம்பந்தன் ஓரிரு தினங்களுக்குள் பத்திரிகை மாநாடு ஊடாக அறிவிப்பது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், தர்மலிங்கம் சித்தார்த்தன், ராகவன், கருணாகரம், இரா.துரைரெட்ணம், ஹென்றி மகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## அரசிலிருந்து....

எனவும் கட்சித் தலைவர் ஹக்கீம் இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் குறிப்பிட்டார்.

இந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், மாநகர, உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை ஆளும் கட்சிக்கு முரணாக முடிவெடுத்த போது தமது கட்சிக்கு எந்தவிதமான சேதாரமும் ஏற்படாமல் தடுக்கவும், தமது முடிவு இனவாதிகளின் விஷமப் பிரசாரங்களுக்கு இடம் தந்து விடக் கூடாது என்பதற்காகவுமே தாம் ஜனாதிபதித் தேர்தல் குறித்து முடிவெடுக்க கால தாமதமானதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

அது குறித்து பி.பி.சி. தமிழோசையுடன் பேசிய அமைச்சர் ரவூப் ஹக்கீம், நாட்டில் ஒரு நல்லாட்சியை ஏற்படுத்தும் நோக்கிலேயே தமது கட்சி ஏகமனதாக இந்த முடிவை எடுத்ததாகக் கூறினார்.

## நாட்டைப்...

அரசாங்கம் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மைத்திரி பால சிறிசேனவிற்கு நேரடியாக அல்லது மறைமுகமாக ஆதரவளிக்கலாம். நாட்டைப் பிரிப்பதற்கான சதித்திட்டத்தின் ஒரு பகுதியாகவே இது இடம்பெறுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## குளத்தில்...

நிலையில் நீரில் மூழ்கி மரணமடைந்தார். குளத்தில் தவறி விழுந்தவர் காப்பாற்றப்பட்டார். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (70)

## 8 தமிழக...

தீவுக் கடற்பரப்பில் தத்தளித்த சமயமே இவர்களைக் கடற்படையினர் மீட்டனர். இவர்கள் நெடுந்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (25)

## காங்கேசன்துறைக்கு...

தையும் ஊடறுத்து நேற்று புகையிரதம் காங்கேசன்துறையைச் சென்றடைந்தது.

இந்த பரீட்சார்த்த சேவையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்து காங்கேசன்துறைவரை புகையிரதத்தில் பயணத்தையும் மேற்கொண்டிருந்தார்.

எதிர்வரும் 2 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்தேவி புகையிரத சேவையை காங்கேசன்துறை வரை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொது...

தொடர்ந்து மதியம் வவுனியா மாவட்டத்திலும், பிற்பகல் யாழ். மாவட்டத்தில் நல்லூரிலும் நடைபெறவுள்ளது.

மேலும் பொது எதிரணியினர் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு விஜயம் செய்யாத நிலையில், குறித்த மாவட்டங்களில் வரவேற்பு நிகழ்வுகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொது எதிரணி விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாவற்குள நீர்மட்டம் அதிகரிப்பு வெள்ள அபாய எச்சரிக்கை

(வவுனியா)

வவுனியா, பாவற்குளத்தின் நீர் மட்டம் அதிகரித்தமையால் கந்தசாமி நகருக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

பாவற்குளத்தின் நீர்மட்டம் அதிகரித்தமையால் அதன் வான் கதவுகள் நான்கு அடிக்கு திறக்கப்படவுள்ளது. இதனால் கந்தசாமிநகர், கிறிஸ்தவகுளம் ஆகிய பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் உள்ளது. எனவே குறித்த பகுதிகளிலுள்ள மக்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பாவற்குளத்தை அண்மித்த தாழ் நிலப் பகுதியில் வசிக்கும் மக்களை அவதானத்துடன் இருக்குமாறும் அவர் தெரிவித்தார்.

# இரணைமடு நீரை கடலுக்குள் விட சுண்டிக்குளம் தொடுவாய் உடைப்பு

(கிளிநொச்சி)

இரணைமடு குளத்திலிருந்து வான் பாயும் நீர், தாழ் நிலங்களில் தேங்காமல் கடலுக்கு செல்லும் பொருட்டு சுண்டிக் குளம் தொடுவாய் (நன்னீர் சேகரிப்பு அணைக்கட்டு) பகுதி நேற்றுக் காலை உடைக்கப்பட்டு நீர் கடலுக்கு விடப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப் பாசன பொறியியலாளர் என். சுதாகரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமாகிய இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் 31 அடிக்கு அதிகமாக நிரம்பியதை அடுத்து, 10 வான் கதவுகளும் 8 அங்குலம் அளவுக்கு கடந்த 22ஆம் திகதி திறந்து விடப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் கிளிநொச்சியில் மழை பெய்து வருவதால் குளத்தின் நீர் மட்டம் அதிகரித்து செல்வதால் வான் கதவுகள் 3 அடிக்கு திறந்து விடப்பட்டன.

வான் பாயும் நீர் தாழ்நிலப் பிரதேசங்களில் தேங்கி நின்று வெள்ளப்பாதிப்புக்களை ஏற்படுத்தியதை அடுத்து, நீரைக் கடலுக்குச் செலுத்தும் பொருட்டு சுண்டிக்குளம் பகுதியில் போடப்பட்ட தொடுவாய் உடைக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, தாழ் நிலங்களில் நீர் தேங்கி நிற்பது குறைவடைந்து வருகின்றது.

# மைத்திரிக்கு ஆதரவாக பிரசாரம்; மட்டக்களப்பில் தாக்குதல்

மட்டக்களப்பு கல்லடி, உப்போடையில் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் இருவர் காயமடைந்துள்ளதோடு ஒருவர் காணாமற்போயுள்ளதாக எதிரணியினர் தெரிவித்துள்ளனர்.

பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தேர்தல் பிரசாரத்திற்காக இன்று மட்டக் களப்பு மாவட்டம் செல்லவுள்ளார்.

கல்லடி சிவானந்தா தேசியப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ள பிரசாரக் கூட்டத்தில் அவர் கலந்து கொள்கின்றார்.

தேர்தல் பிரசார மேடை அமைப்புக்காக சென்றிருந்த எதிரணி ஆதரவாளர்கள் மைதானத்திற்கு முன்பாக நின்று கூட்டம் தொடர்பான பிரசுரங்களை விநியோகம் செய்து கொண்டிருந்த வேளை வாகனங்களில் வந்த குழுவொன்றினால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

தாக்குதல் சம்பவத்தின் பின்னர், காயமடைந்த இருவரை தவிர்ந்த மற்றுமொருவர் காணாமற்போயுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர்களில் ஒருவரான த.மாசிலாமணி தெரிவித்தார்.

இரண்டு வாகனங்களில் கத்திகள், தடிகள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் வந்த சுமார் 30 பேர் கொண்ட குழுவொன்றே இந்தத் தாக்குதலை நடத்தியதாக அவர் மேலும் தெரிவித்தார்.


## பிரதி அமைச்சருக்கு விளக்கமறியல்

கைது செய்யப்பட்ட பிரதி அமைச்சர் நிஷாந்த முதுஹெட்டிகமவை எதிர்வரும் 30 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு பிரதான நீதவான் புர்னிமா பரனகம நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வெளிநாட்டுக்கு தப்பிச்சென்ற பிரதி அமைச்சர் நேற்று நாடு திரும்பியிருந்தார். இதன்போதே இவர் குற்றத்தடுப்புப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். பொலிஸ் பாதுகாப்பில் காணப்படும் மூவரை பலாத்காரமாக அழைத்துச் சென்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவருக்கு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்ததாக சிங்கள ஊடகமொன்று அறிவித்துள்ளது.

அதேவேளை, பிரதி அமைச்சர் நிஷாந்த முதுஹெட்டிகமவின் கைதைத் தொடர்ந்து அவரது சாரதி டபிள்யூ.ஜி. மெத்சிரி சமிந்த நேற்று உடுகம பொலிஸில் சரணடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# முல்லை கள்ளப்பாட்டில் இரு கடைகளில் கொள்ளை



முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் பல்பொருள் வணிகக்கடை ஒன்றும் கடற்றொழில் உபகரண வணிகக்கடை ஒன்றும் நேற்று முன்தினமிரவு கொள்ளையிடப் பட்டுள்ளன.

நா.சிவலோகேசுவரன் என்பவருக்குச் சொந்தமான பல்பொருள் வாணிபத்தில் மேற்கொள்ளப் பட்ட கொள்ளைச்சம்பவத்தின் போது சுமார் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட பெறுமதியுள்ள பொருட்கள் சூறையாடப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மேற்படி சம்பவத்தை வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரில் சென்று உறுதிப்படுத்தினார். இதே வேளை முல்லைத்தீவு பொலிஸாரும் நேரில் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

ஒரே இரவில் இரண்டு கடைகள் உடைக்கப்பட்டு பொருட்கள் கொள்ளையிடப்பட்ட சம்பவம் அப்பகுதி வாழ் மக்களிடையே அச்சத்தை தோற்றுவித்துள்ளது.

## மீளாய்விற்கு விண்ணப்பிக்கலாம்

கல்விப் பொதுத்தராதர உயர் தரப் பரீட்சையின் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான மீளாய்வு விண்ணப்பங்கள் பெறுபேறு ஆவணங்களுடன் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதாக பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தனியார் பரீட்சார்த்திகளுக்கான மாதிரி விண்ணப்பங்களை அச்சு ஊடகங்களில் பிரசுரிக்கவுள்ளதாகவும் திணைக்களம் அறிவித்துள்ளது.


இந்திய மென்பொருள் வல்லுனர்களால் உருவாக்கப்பட்ட

K7™ TOTAL SECURITY
VERSION FREE

வைரஸ் காட்
இப்பொழுது இலங்கையிலும் முன்னணியில்

20 வருடங்களுக்கு மேலாக வைரஸ் தடுப்பு மென்பொருள் துறையின் முன்னோடிகளாக விளங்கும் அனைத்து K7 வைரஸ் தடுப்பு தயாரிப்புகளும் உங்கள் கணனி அமைப்புகளுக்கு அதிகபட்ச உயர்சக்தி மிகுந்த இணையத்தள பாதுகாப்பை அளிக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே நீங்கள் K7 தயாரிப்பொன்றை வாங்கும் போது, உங்கள் கணனியை அச்சுறுத்தக்கூடிய எந்தவொரு ஆபத்தையும் எதிர்கொள்ளக்கூடிய அதிநவீன, அறிவார்ந்த ஆயுதம் ஒன்றை பெற்றுள்ளீர்கள் என உறுதியாய் நம்ப முடியும்.




Enquiry T.P.: 021 222 1121

Dealer in North
NALIN Information Technologies (Pvt) Ltd.
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
(C/3480)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 டிசம்பர் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.